தமிழர் பொருண்மியம்

வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 50/=

இதழ் - 29

30.07.2023




விலைவாசி உயர்வை சமாளிக்க கொஞ்சம் "ரிஸ்க்" தேவைதான் 02

யாழ்ப்பாணத்தில் தயாராகும் இறப்பர் காலணிகள் 12

(ஏ)மாறியது நெஞ்சம் 14

# தென்னை சிவப்பு கூன்வண்டு தாக்குதல்

தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ... 04

# விலைவாசி உயர்வைச் சமாளிக்க கொஞ்சம் "ரிஸ்க்" தேவைதான்!



- எஸ்.வள்ளியப்பன் -

" உடனடியாக தேவைப்படாத, நீண்டகால நோக்கில் முதலீடு செய்ய வாய்ப்பிருக்கிற பணத்தை கொஞ்சம் ரிஸ்க் எடுத்தாவது கூடுதல் வருமானம் வருவது போல முதலீடு செய்ய வேண்டும். அது நிலமாகவோ, நிறுவனப் பங்குகளாகவோ இருக்கலாம். நீங்கள் உழைக்கும் காலத்திலேயே இவை தொடர்பாக சிந்திப்பது பலனளிக்கும். பிற்காலத்தில் நிதி நெருக்கடியை எதிர்கொள்ளாமல் வாழ்வதற்கும் அது உதவும். "

வெளியூரில் வசிக்கும் பாடசாலைக் கால நண்பன் ரவிக்குமார். அவன் வீட்டிற்குப் போகக் கிளம்பினேன். பல ஆண்டுகளுக்குப் முன்பு அடிக்கடி போயிருந்தாலும் இப்போது அவன் வீட்டைக் கண்டுபிடிப்பது சிரமமாக இருந்தது. அவ்வளவு மாற்றங்கள்.

அந்தக் காலத்தில் அந்த வீடுதான் அந்தத் தெருவிலேயே பெரிய வீடு. இப்போது அந்தத் தெருவில் பல புதிய வீடுகள், சில அடுக்ககங்கள் வந்துவிட்டிருந்தன. அந்த வீடு மற்றப் புதிய, பெரிய கட்டிடங்களுக்கு நடுவில் சிறிதாகத் தெரிந்தது.

நல்ல வேளையாகத் துருப்பிடித்து, ஆங்காங்கே உடைந்திருந்த மயில் உருவம் பொறித்த கம்பி கேட் அடையாளம் காட்டியது. அதைத் தள்ளிவிட்டு உள்ளே போக எத்தனித்தபோது கொஞ்சம் தடுமாறிவிட்டேன். காரணம், படியில் இறங்குவது போல இரண்டடி தாழ்வாக இருந்த வீட்டின் முன் தரை. அது தெரியாமல் சாதாரணமாக காலை எடுத்து வைத்ததால் உண்டான தடுமாற்றம்.

வீதியில் இருந்து இரண்டு படிகள் உயரத்தில் இருந்த வீட்டின் அதே பழைய தரை தளம்தான். ஆனால், தொடர்ந்து கடந்த பல ஆண்டுகளாகச் சுரண்டாமல் திரும்பத் திரும்பப் போடப்பட்ட தார்ச் சாலையால், சாலையின் உயரம் கூடி, வீடு கீழே இறங்கிவிட்டது போலாகிவிட்டது.

ரவிக்குமார் மட்டும் வீட்டில் இருந்தான். பலவற்றையும் பேசினோம். பாடசாலை காலம் குறித்தும் பேசிச் சிலாகித்தோம். பேருந்துக் கட்டணம், ஒட்டோக் கட்டணம், அளவு சாப்பாட்டுப் பார்சல், திரையரங்க டிக்கெட் விலைகள் என அப்போதைய குறைந்த விலைவாசி குறித்து பேசி வியந்தோம்.

"ஆனா இப்ப எல்லாத்துக்கும் என்ன விலை பாத்தியா?" என்றான் ரவிக்குமார்.

"அது சரி. ஆனா, அப்பவெல்லாம் மக்களுக்கு என்ன சம்பளம், இப்ப என்ன சம்பளம்? இதுவும் கூடியிருக்கில்ல?" நான்.

"நல்லா கூடுச்சு போ. விலைவாசி கூடுன அளவா சம்பளங்கள் கூடியிருக்கு?" அவன்.

சில வினாடிகள் யோசித்த பின் நான் சொன்னேன் "ஆமா. நீ சொல்றது சரிதான். சிலருக்கு நல்லாக் கூடியிருக்கு. வேறு சிலருக்கு ஓரளவுதான் அதிகரிச்சிருக்கும்"

"அப்படிப்பட்டவங்களுக்கு சிரமம்தானே?"

"எப்படி? உங்க வீட்டு வாசல் மாதிரியா?"

"என்னடா சொல்ற?"

"பழசைச் சுரண்டி எடுக்காம, ஒண்ணு மேல ஒண்ணாப் போட்டிருக்கிற உங்க வீதி மாதிரி விலைவாசி உயர்ந்துகிட்டே போகுது. ஆனா, அதற்கு ஏற்றவாறு வருமானத்த அதிகரிச்சுக்காதவங்க நிலைமை, மாற்றிக் கட்டாத உங்க வீடு மாதிரி, அப்படியே இருந்தாலும் தாழ்வு ஆயிடுச்சு. தடுமாற வைக்குது".

"என்ன கிண்டலா?"

"இல்லடா. அதுதான் உண்மை".

"ஐயா எனக்கு நல்ல வேலை கிடைக்கல. என் முதலாளி கொஞ்சம் கொஞ்சமாத்தான் சம்பளத்தை ஏத்துறாரு. நான் என்ன செய்யமுடியும்?"

"கிடைச்சதுல சேமிச்சு ஆரம்பத்திலருந்தே சரியா முதலீடு செய்திருக்கணும்"

"செய்திருக்கேனே"

"குட். அந்த முதலீடுக்கு வருமானம் வருதில்ல? சம்பளத்தோட அதையும் சேர்த்துப் பாரு"

"என்ன பெருசா வருமானம் வருது? தேஞ்சுபோன வங்கி வட்டி 7 வீதம்தான்"

"வங்கி தவிர வேற ஏதிலயாச்சும் முதலீடு செய்யவில்லையா?"

"ஹூஹூம். வேற எதை நம்பமுடியும் சொல்லு. மிடில்கிளாசுகு சேஃப்டிதானே முக்கியம்?"

"ஹலோ நமக்கு வேண்டிய ஒரு பொருளை எடுக்க, நம்ம போட்டியாளர் பஸ்ல போய்க்கிட்டு இருக்கார்ன்னு வச்சுக்க"

"சரி"

"நாம் அவரை முந்திப் போய், அதை எடுக்கணும்னா என்ன செய்யணும்?"

"என்ன செய்யணும்?"

"அவர் போற வண்டி வேகத்தைவிட கூடுதல் வேகமாப் போற வண்டியில நாம் போகணும். மோட்டார் சைக்கிள் அல்லது கார் அல்லது ஒட்டோ மாதிரி.."

"புரியல"

"விலைவாசி சராசரியா வருஷத்துக்குச் சுமார் 10 வீதம் உயருதுன்னு தெரியுது.




அப்ப நாம செய்யுற முதலீடுகள் அந்த பத்து சதவீதத்தைவிட அதிக வருமானம் தந்தாத்தான், நம்மளால விலைவாசியையும் தாண்டி, ஓரளவுக்காவது வசதியாக வாழ முடியும்"

"இல்லன்னா?"

"ஓர் உதாரணம் சொல்றேன். இலட்ச ரூபா சேர்த்து வங்கியில் 7.5 % வட்டிக்குப் போட்டுவச்சா, 10 வருஷம் கழிச்சு என்ன கொடுப்பாங்க?

"நீயே சொல்லு"

"2 இலட்சத்து 10 ஆயிரம் கிடைக்கும். அதே சமயம் 10 வருஷத்தில விலைவாசி எவ்வளவு கூடியிருக்கும்?"

"இப்ப கூடிக்கிட்டு இருக்கிற அளவை வச்சுப் பார்த்தா, அதைவிட அதிகமாத்தான் இருக்கும்"

"அதனால 10 வருஷத்துகெல்லாம் முதலீடு செய்யனுமின்னா சராசரியா வருஷத்துக்கு 12, 15 சதவீதத்துக்கு அதிகமா வருமானம் வர்ற மாதிரி ஒரு பகுதி பணத்தையாவது முதலீடு செய்யவேண்டும்"

"ஏழரை, எட்டு சதவீதத்துக்கு மேல வருமானம் வேணும்னா, அந்த முதலீடுகள்ல அதிகளவு ரிஸ்க் இருக்கும்தானே"

"இருக்கும்தான். வங்கிகள் மற்றவர்களுக்குக் கொடுக்கிற வட்டி விகிதத்தைவிட 60 வயதுக்கு மேலான சீனியர் சிட்டிசன்களுக்கு அதிக வட்டி கொடுத்தார்கள். அது ஏன் தெரியுமா?"

"தெரியாது நீயே சொல்லு"

"60 வயதிலை பெரும்பாலும் பணி ஓய்வு. வேலைக்குப் போகமாட்டார்கள். சம்பளம் வராது. அவர்கள் கையில் இருக்கிற சேமிப்பில் இருந்து கிடைக்கிற வருமானம்தான். அப்படிப்பட்டவர்கள் ரிஸ்க் எடுக்கக் கூடாது. அதனால கொஞ்சம் கூடுதல் வட்டி. ஆனால் ஐம்பது வயசுக்கு குறைவா இருக்கிறவங்க கொஞ்சம் ரிஸ்க் இருந்தாலும் ஓரளவு முதலீட்டுக்காவது கூடுதல் வருமானம் வர்ற மாதிரி முதலீடு செய்யணும்"

வயதான பிறகு முதலீடுகளுக்குக் கிடைக்கும் வருமானத்தில் நிச்சயத்தன்மை வேண்டும். ஆனால் சம்பளம் வந்து கொண்டிருக்கும் காலகட்டத்தில் சேமித்துச் செய்யும் முதலீட்டில் இருந்துவரும் வருமானம் அப்போதைய காலத்திற்கானது அல்ல. அந்த வருமானம் உடனடி தேவைக்கோ நுகர்வுக்கோ அல்ல. அவை பிற்காலத் தேவைகளுக்கான ஏற்பாடு. எனவே காத்திருக்க முடியும்.

உடனடியாகத் தேவைப்படாத, நீண்ட கால நோக்கில் முதலீடு செய்ய வாய்ப்பிருக்கிற பணத்தை கொஞ்சம் ரிஸ்க் எடுத்தாவது கூடுதல் வருமானம் வருவது போல முதலீடு செய்ய வேண்டும். அது நிலமாகவோ, நிறுவனப் பங்குகளாகவோ இருக்கலாம்.

நீங்கள் உழைக்கும் காலத்திலேயே இவை தொடர்பாகச் சிந்திப்பது பலனளிக்கும். பிற்காலத்தில் நிதி நெருக்கடியை எதிர்கொள்ளாமல் வாழ்வதற்கும் அது உதவும்.!

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி : 0764438620

## இறக்குமதித் தளர்வு?

கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டபோது இறக்குமதிப் பொருட்கள் பலவற்றுக்கு அரசாங்கம் தடை விதித்தது. பொருளாதார நெருக்கடிக்கு அடிப்படை காரணமாக இருந்தது அந்நியச் செலாவணிப் பிரச்சினையே. அதனால் உருவாகிய கடன் நெருக்கடி அரசாங்கத்தை வங்குரோத்து நிலைமைக்குக் கொண்டு சென்றது.

இந்த நெருக்கடியிலிருந்து மீளவேண்டுமானால் பல விடயங்களுக்கு கட்டுப்பாடு அவசியம் என்பது உணர்ந்து கொண்ட நிலைமையிலேயே இறக்குமதிப் பொருட்கள் பலவற்றுக்கு அரசாங்கம் தடை விதித்தது. அதனைவிட பொருட்களை இறக்குமதி செய்வதற்கு தேவையான டொலர் இல்லை என்பதும் ஒரு பிரச்சனையாக இருந்தது.

இப்போது நிலைமைகள் ஓரளவுக்கு வழமைக்கு திரும்பிக் கொண்டிருக்கும் பின்னணியில் பல பொருட்களுக்கான தடையை அரசாங்கம் தளர்த்திக் கொண்டிருக்கின்றது. அடுத்த மாதத்தில் இருந்து மேலும் 300 வகையான பொருட்களுக்குத் தடையை நீக்குவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இவ்வாறு தடை நீக்கப்படும் பொருட்கள் எவையுமே அத்தியாவசிய பொருட்கள் அல்ல. இவற்றில் பெரும்பாலான பொருட்கள் இலங்கையிலேயே உற்பத்தி செய்யக்கூடியவை அல்லது ஆடம்பரப் பொருட்கள்.

உள்ளூரிலேயே உற்பத்தி செய்யக்கூடிய பொருட்கள் மீதான தடையை நீக்குவது இரண்டு வகையான பிரச்சினைகள் ஏற்படுத்துகின்றது. முதலாவது அதனால் உள்ளூர் உற்பத்தி பாதிக்கப்படுகின்றது. இரண்டாவது பெரும் தொகையான அந்நியச் செலாவணி மீண்டும் வெளிநாட்டுகளுக்குச் செல்வதற்கு இது காரணம் ஆகிறது.

இறக்குமதிகளுக்கான தடையை நீக்கும்போது பெருமளவு டொலர் வெளிநாடுகளுக்குச் செல்லும். இதனால் டொலரின் பெறுமதி அதிகரிக்கும்.

தற்போது டொலரின் பெறுமதி மீண்டும் அதிகரிக்க தொடங்கி இருப்பதற்கு இறக்குமதி மீதான தடை நீக்கம் தான் காரணம். அதனால் இறக்குமதி பொருட்கள் மீதான தடைகளை நீக்கும்போது அரசாங்கம் நிதானமாக செயல்படுவது அவசியம்.

வகைதொகையற்ற இறக்குமதியும் அதற்கேற்ற வகையிலான ஏற்றுமதிகள் இல்லாமல் இருப்பதும்தான் அந்நியச் செலாவணிப் பிரச்சினை உருவாகி நாடு வங்குரோத்து நிலைமைக்குச் சென்றதாக அறிவிக்கப்படுவதற்குப் பிரதான காரணமாக இருந்துள்ளது. தற்போது ஏற்றுமதிகள் பெருமளவுக்கு அதிகரிக்காமல் இருக்கும் அதே வேளையில் இறக்குமதியை அதிகளவுக்குத் திறந்து விடுவது அரசாங்கம் மீண்டும் அதே தவறைச் செய்கின்றதா? என்ற கேள்வியை எழுப்புகின்றது.

# அன்புள்ள ஆசிரியருக்கு....



### நல்லூர்த் தேர்த்திருவிழா

சுதாகரன் பேரம்பலம் எழுதிய நல்லூர்த் தேர்த்திருவிழா - வடக்கின் சுற்றுலாத்துறைக்கு வாய்ப்பை ஏற்படுத்தித் தருமா? என்ற தலைப்பில் கடந்த வாரம் பொருண்மியம் வெளியிட்டிருந்த கட்டுரை சிறப்பானதாக இருந்தது. நல்லூரை மையப்படுத்தி பொருளாதார வளாச்சியை அடிப்படையாகக் கொண்டு நாம் சிந்திக்க வேண்டும் என்பதை உணர்த்துவதாக இந்தக் கட்டுரை அமைந்திருந்தது. நல்லூர்த் திருவிழாவுக்கு இன்னும் சுமார் ஒரு மாதம் கூட இல்லாத நிலையில் இது தொடர்பாகச் சிந்தித்துச் செயற்படுவதற்கு இன்னும் சில வாரங்களே உள்ளன. அதற்கான ஒரு சிந்தனையை தூண்டுவதாக இந்தக் கட்டுரை உள்ளது. சிந்திக்க வேண்டியவர்கள் சிந்தித்துத் திட்டமிட்டுச் செயற்பட்டால் பயனுள்ளதாக இருக்கும்.

**நாகேஸ்வரி வில்வரட்ணம், சிட்டி, அவுஸ்திரேலியா.**

●●●

### இயற்கையான தேனீ வளர்ப்பு

இயற்கையான முறையில் தேனீ வளர்ப்பில் ஈடுபட்டுள்ள நிரோஜன் என்பவரது நேர்காணலைக் கடந்த வார பொருண்மியம் இதழில் வாசிக்க முடிந்தது. தேனீ வளர்ப்புக் குறித்துப் பல்வேறு அச்சங்கள் பலருக்கும் இருக்கின்றன. இதனை எவ்வாறு அதனுடைய வாழ்விடங்களைப் பாதுகாப்புக்கும் வகையில் செய்ய முடியும் என்பதை அவர் தெரிவித்திருப்பது பயனுள்ள தகவல்.

அதேபோல கோவா பயிர்ச்செய்கை குறித்து பிரேம்நாத் எழுதியிருக்கும் கட்டுரையும் சிறப்பானதாகவும் பயனுள்ளதாகவும் அமைந்திருந்தது. கோவா செய்கைக்குப் புதிதாக வருவோருக்குப் பயனுள்ள தகவல்கள் இந்தக் கட்டுரையில் நிரம்பியுள்ளன. அவற்றுக்காக நன்றி.

**கி.சிவராமன். கோப்பாய், யாழ்ப்பாணம்.**

**தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ...**

சந்தாதாரராகுங்கள்!

* **மூன்று மாதங்களுக்கு 1,300 ரூபா தபால் செலவு உட்பட**
* **ஆறு மாதங்களுக்கு 2,600 ரூபா தபால் செலவு உட்பட**

சந்தாத் தொகையை **Green media House (Pvt) Ltd** என்ற பெயரில், **HNB Bank - Jaffna Metro branch - 016010023281** கணக்கு இலக்கத்துக்குச் செலுத்தி, அதற்கான பிரதியுடன் கீழேயுள்ள படிவத்தையும் நிரப்பி வாட்ஸ்அப் மூலமாகவோ தபால் மூலமாகவோ அனுப்பி வையுங்கள்.

மறு வாரத்திலிருந்து தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வரும்!

அனுப்பிவைக்க வேண்டிய முகவரி -

**Green media House (Pvt) Ltd,**
**68, crossette lane, Jaffna.**

**வாட்ஸ் அப், வைபர் இலக்கங்கள் - 0777 276 949**

---

**தமிழர் பொருண்மியம் - சந்தாப் படிவம்**

**பெயர்** - ----------------------------------------
**முகவரி** - ----------------------------------------
**தொலைபேசி இலக்கம்** - ----------------------------------------
**சந்தாக் காலம்** - ----------------------------------------
**செலுத்திய தொகை** - ----------------------------------------
**செலுத்திய திகதி** - ----------------------------------------




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 1,69,150 ரூபா.**

**24 கரட் தங்கம் 1,84,450 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**



# கேளுங்கள் தரப்படும்

**கேள்வி -** டொலரின் பெறுமதி தொடர்ந்தும் அதிகரித்துச் செல்வதற்கு என்ன காரணம்? இந்த நிலை தொடருமா?

**கோமளா வரதன்,**
**கொட்டாஞ்சேனை, கொழும்பு 13.**

**பதில் -** டொலரின் பெறுமதி இலங்கையில் மேலும் அதிகரித்துச் செல்வதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகவே பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

இதற்குப் பல்வேறு காரணங்கள் இருந்தாலும் பிரதானமாக இரண்டுவிடயங்களே சொல்லப்படுகின்றன. முதலாவது, 300 க்கும் அதிகமான பொருட்களின் இறக்குமதிக்கு விதித்திருந்த தடையை அரசாங்கம் நீக்கியிருக்கின்றது. இதனால், வர்த்தகர்கள் குறிப்பிட்ட பொருட்களை இறக்குமதி செய்வதற்கு அவசரப்படுகின்றார்கள். இதனால், அவர்களுக்கு அதிகளவு டொலர் தேவைப்படுகின்றது. டொலருக்கான கேள்வி அதிகரிப்பதால், இலங்கை ரூபாவுக்கு எதிரான அதன் பெறுமதி அதிகரித்துச் செல்கின்றது. இறக்குமதி பெருமளவுக்குத் திறந்துவிடப்பட்டிருப்பதால், டொலரின் பெறுமதி அதிகரித்துச் செல்வதற்கான வாய்ப்புக்கள் தொடர்ந்தும் இருக்கும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது. இது முதலாவது காரணம்.

இரண்டாவது காரணம் - அமெரிக்க ரிசேர்வ் வங்கி கடந்த புதன்கிழமை முதல் அதன் வட்டி வீதத்தை அதிகரித்துள்ளது. அதாவது வட்டி வீதம் 5.25 வீதத்திலிருந்து 5.50 வீதமாக அதிகரித்துள்ளது. இந்த அதிகரிப்பு 0.25 வீதம்தான். ஆனால், இது அதிகளவு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது என்று பொருளாதார நிபுணர்கள் கருதுகின்றார்கள். அமெரிக்காவில் காணப்படும் பணவீக்கமும், மற்றும் உள்நாட்டுப் பொருளாதாரக் காரணிகள் சிலவும் இந்த வட்டி வீத அதிகரிப்புக்குக் காரணமாக இருப்பதாகச் சொல்லப்படுகின்றது.

இந்த வட்டி வீத அதிகரிப்பு அமெரிக்காவில் மட்டும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதல்ல. இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகளிலும் அதன் தாக்கத்தை உணரக் கூடியதாக இருக்கும். அதாவது, இந்த வட்டி வீத அதிகரிப்பால், இலங்கை போன்ற நாடுகளுக்கு டொலர் உள்வருவது பெருமளவுக்குக் குறைவடையலாம்.

அமெரிக்க ரிசேர்வ் வங்கியின் வட்டி வீதம் எதிர்வரும் காலங்களில் மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்களும் காணப்படுகின்றன. அதனால், அமெரிக்காவில் உள்ள செல்வந்தர்களும் பெரும் வர்த்தகப் புள்ளிகளும் வெளிநாடுகளில் முதலீடு செய்வதைவிட தமது நாட்டு வங்கிகளில் வைப்பிலிடுவதைத்தான் அதிகம் விரும்புவார்கள். இதனால், டொலரின் உள்வருகை மேலும் குறைவடையும். இதனால், இலங்கையில் எதிர்காலத்தில் டொலரின் பெறுமதி அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.




## கேளுங்கள் தருகின்றோம்

தமிழர் பொருண்மியம் வாசகர்கள் பொருளாதாரம் உட்பட அதனுடன் தொடர்புபட்ட தங்களுடைய கேள்விகளை - சந்தேகங்களை எமக்கு அனுப்பி வைக்கலாம். அடுத்த வாரம் முதல் அதற்கான களம் திறக்கப்படுகின்றது. உங்கள் கேள்விகளை அனுப்பிவைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி -
tamilseconomy@gmail.com




| | |
|---|---|
| கத்தரிக்காய் | - 200/= |
| உருளைக்கிழங்கு | - 220/= |
| பச்சைமிளகாய் | - 300/= |
| தக்காளி | - 350/= |
| மரவள்ளிக்கிழங்கு | - 200/= |
| கோவா | - 250/= |
| கரட் | - 350/= |
| பூசணி | - 140/= |
| புடோல் | - 120/= |
| வாழைக்காய் | - 160/= |
| சின்ன வெங்காயம் | - 300/= |
| பெரிய வெங்காயம் | - 160/= |
| பாவற்காய் | - 350/= |
| வெண்டிக்காய் | - 200/= |
| கருணைக்கிழங்கு | - 180/= |
| பயற்றங்காய் | - 300/= |
| லீக்ஸ் | - 250/= |
| பீற்றூட் | - 250/= |
| கறிமிளகாய் | - 350/= |
| முருங்கைக்காய் | - 400/= |
| போஞ்சி | - 450/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 218/= |
| கனடா டொலர் - | 243/= |
| சீன யுவான் - | 44/= |
| யுரோ - | 357/= |
| ஜப்பான் யென் - | 2.3/= |
| சிங்கப்பூர்டொலர் - | 242/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 417/= |
| சுவிஸ் பிராங் - | 372/= |
| அமெரிக்க டொலர் - | 322/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 229/= |
| கனடா டொலர் - | 256/= |
| சீன யுவான் - | 47/= |
| யுரோ - | 374/= |
| ஜப்பான் யென் - | 2.4/= |
| சிங்கப்பூர் டொலர் | 255= |
| ஸ்ரோலிங் பவுண் - | 436/= |
| சுவிஸ் பிராங் - | 393/= |
| அமெரிக்க டொலர் - | 335/= |

# கிராமிய வாழ்க்கை முறையும் தற்சார்புப் பொருளாதாரமும்

- இ.ஷாமிலன் -



எனது கிராமம், உசன், தென்மராட்சி பிரதேசம். யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ளது. தற்சார்புப் பொருளாதாரத்தில் இந்தக் கிராமம் எந்தளவுக்கு நிறைவாக உள்ளது என்பது ஒரு முன்னுதாரணம்.

1. இங்கு மழையை நம்பிய காலபோக நெற்செய்கை செய்வோம். இதன்மூலமாக எமது கிராமத்தவர்களுக்கு அரிசியும் (புழுங்கல்,பச்சைஅரிசி) அரிசி சாரந்த உப உற்பத்திகளான புட்டுமா, இடியப்பமா, மற்றும் பொரி அரிசி என்பன செய்வோம். நெல் அறுவடைக்குப் பின் சிறுதானியங்களான கௌப்பி, பயறு, உழுந்து மற்றும் எள்ளு என்பன செய்வோம்.

முக்கியமாக அனைத்து வேலைகளிலும் எமது ஊரவர்களே முன்னின்று உழைப்பார்கள். மேலும் எமது மாடுகளிற்கு தேவையான வைக்கோலும் இங்கேயே கிடைக்கும்.

2. எமது மண்ணில் தென்னை நன்கு செழித்து வளரும். இதிலிருந்து அன்றாட உணவுத்தேவைக்கான தேங்காய்ப்பால் தே.எண்ணெய், ஓலையிலிருந்து வீடு மேய்ச்சல், வேலி அடைப்பு என்பன மேற்கொள்வோம். ஈர்க்கிலிருந்து விளக்குமாறும் தும்பிலிருந்து கயிறு, தும்புத்தடி என்பனவும் சிரட்டையிலிருந்து அகப் பையும் செய்வோம். பாளை பொறுக்கி கொட்டில் தாழ்வாரங்களில் அசடு கட்டி மாரி நேரம் அடுப்பு எரிப்போம்.

3. பனையில் சார்பு எடுத்து படுக்கப் பாய், விசுக்க விசிறி, புட்டுக் குழைக்க, குத்தப் பெட்டி இழைப்போம், பூசைப்பெட்டி, விதைப்பு கடகம்,உறி, பனங்கட்டிக் குட்டான் என்பன செய்வோம். நார் எடுத்து கடகம், புட்டவிக்க நீத்துபெட்டி இடியப்பம் அவிக்க தட்டு, செய்வோம். பனம்பழம் புளிஞ்சு பினாட்டு செய்வோம். பாத்தி போட்டு கிழங்கு எடுத்து ஒடியல், புளுக்கொடியல் போடுவோம், மா எடுத்து புட்டவித்து கச்சாய் கடல் ஒட்டி, கெழுத்தியுடன் குழம்பு வைத்து புட்டுடன் உண்போம். மாலை நேரம் வெங்காயம், பச்சை மிளகாய், மிளகு சிறிது உப்புச் சேர்த்து துவையல் செய்து உண்டு மகிழ்வோம். கருப்பணி வடித்து பனங்கட்டி காய்ச்சுவோம்.

ஆறுதலுக்கும் உச்சாகத்துக்குமாககள் எடுப்போம்.

4. கிணத்தடியில குறைஞ்சது நாலைஞ்சு வாழை நிக்கும். இலை பழம், காய், தண்டு மற்றும் பொத்தி எனப் பலவாறு பயன்படுத்துவோம்.

5. வீட்டுக்கு வீடு பட்டி இருந்தது, பிற்காலத்தில் இல்லாமல்போய் இப்பொழுது வீட்டிற்கு ஐந்து ஆறு மட்டுமே உள்ளது. இதனால் எமக்குச் சுத்தமான உடன் பால் கிடைக்கும், அதிலிருந்து தயிர், வெண்ணை, நெய், மோர் கிடைக்கும். அத்தோடு விளை நிலங்களுக்கான எருவும் கிடைக்கும். மேலதிகமான நாம்பன்களை விற்று பணம் சேர்ப்போம். மாட்டிற்கான வைக்கல் வயல்களிலிருந்து கிடைக்கும்.

5. ஆடும் வளர்க்கிறோம். அதிலிருந்து ஆட்டுப் பால் கிடைக்கும். பண்டிகைக் காலங்களில் இறைச்சி போடுவோம். மேலதிக கிடாய்களை விற்றுப் பணமாக்குவோம். ஆடு விரும்பி உண்ணக்கூடிய ஆல், வேல், இத்தி, கிளிசிறிடியா, குறிஞ்சா, மற்றும் மாங்கொடி என்பன எமது ஊரிலேயே கிடைக்கும்.

6. எல்லோர் வீட்டிலும் நாட்டு கோழி வளர்ப்போம். இதனால் முட்டை, இறைச்சி என்பன கிடைக்கும், அடை கட்டி பொரிக்க வைத்துப் பெருக்குவோம். குஞ்சா கவும் விற்போம் சற்று வளர்த்து விறாத்து பதமாயும் விற்போம் இன்னும் வளர்த்து முட்டையிடும் பருவமாகவும் விற்போம்.

7. வீட்த் தோட்டம் எல்லா வீடுகளிலும் இருக்கும். எம் ஊர் மண்ணிற்குப் பொதுவாக பயத்தங்காய், மிளகாய், மரவள்ளி, கச்சான், கத்தரி, வெண்டி, பாகல், புடோல், வெங்காயம், இராசவள்ளி, கீரை என்பன மிவும் சிறப்பாக வரும். அனேகர் வீடுகளிலும் ஒருசில பயிராவது இருக்கும். அறுவடை தொடங்கியதும் இருப்பவர்கள் இல்லாதவர்களுக்கு கொடுத்து தம்மிடம் இல்லாதவற்றை இருப்பவர்களிடம் வாங்கிப் பகிர்ந்து கொள்வார்கள்.

8. தென்னையிலிருந்து பாளை, மட்டை, பனை மட்டை, பூவரசு, மஞ்சள்நுணா, வேம்பு, நாவல் போன்றவற்றிலிருந்து போதியளவு விறகு கிடைக்கும்.

9. மனதிற்கு நிறைவாகச் செய்ய தோட்ட வேலை உண்டு. சுற்றிவர உலாப்போக நல்ல வயல்வெளிகள் உள்ளன. காற்று வாங்க பொது இடங்களில் குளத்துடன் மரங்கள் சூழ்ந்த மண்டபங்கள் உள்ளன. மகிழ்ந்து நீராட நல்ல பல குளங்கள் உள்ளன.

ஆக மொத்தத்தில் எமது ஊரைப் பொறுத்தவரையில் உணவுப் பஞ்சம் என்பது பெரிய தாக்கத்தைச் செலுத்தாது.

ஏன் எனில் எம்ஊரில் வசிக்கும் எல்லோற்கும் நெல் கிடைக்ககூடியதாய் இருக்கும், தேங்காய் கிடைக்கும், மரக்கறிகள் கிடைக்கும், சிறுதானியங்கள் கிடைக்கும், பால், இறைச்சி, முட்டை கிடைக்கும், பனம் கட்டி கிடைக்கும், பனை, தென்னை சார் உற்பத்திகள் மூலம் (கொட்டில் முதல் பாய், விசிறி, சமையலுக்கான ஏதனங்கள், தும்பு தடி, விளக்குமாறு, இனிப்பு) மேலதிக உற்பத்திகளை சந்தையில் விற்பதன் மூலம் பணமும் கிடைக்கும்.

எமது முன்னோர்கள் செய்த முயற்சியும் அவர்களது ஆசீர்வாதமும் எமக்கு இன்று மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை,உறையுள் என்ற மூன்றையும் பூர்த்திசெய்து அதற்கு மேலாகவும் பல வளங்களையும் தந்து ஊரவர்களான எங்களை மகிழ்வுடன் வாழவைத்துக் கொண்டிருக்கின்றது.

இன்று ஏற்பட்டிருக்கும் உலகளாவிய ரீதியிலான பொருளாதாச் சரிவினை வெற்றியுடன் முகம் கொடுப்பதற்கு கிராமியத் தற்சார்புப் பொருளாதார வாழ்க்கை முறை ஒரு சிறந்த முயற்சியாக அமையும்.

## வரி விளம்பரம் classified advertisement




### வேலைவாய்ப்பு

தமிழ்த் தட்டச்சுத் தெரிந்த பக்க வடிவமைப்பாளருக்கான முழுநேரப் பகுதிநேர (இரவு) வேலைவாய்ப்பு உள்ளது. அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு - 0777277009

---

எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந்துள்ள இயற்கை விவசாயப் பண்ணையில் தங்கி நின்று வேலைசெய்யக்கூடிய ஆண் தோட்டக்காரர் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்துதரப்படும்.

தொடர்புகளுக்கு - 0766482303

---

நாவற்குழியில் உள்ள விருந்தினர் விடுதி (Hotel) ஒன்றில் அறை பராமரிப்பாளர், சுத்திகரிப்புத் தொழிலாளி, உணவு பரிமாறுபவர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன. சம்பளத்திற்கு மேலதிகமாக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777276818

---

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அமையவுள்ள உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனை அங்காடியில் விற்பனை உதவியாளர் வேலைவாய்ப்பு உள்ளது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0767403814

---

நாட்டின் பல பாகங்களில் வியாபாரத்தினைக் கொண்டுள்ள நிறுவனத்தின் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்குக் கணக்கு உதவியாளர் (Account Assistant) வேலைவாய்ப்பு உள்ளது. கணக்குவழக்குப் பராமரித்தல், வங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளல் என்பன வேலைகளாக இருக்கும். அனுபவம் வாய்ந்த கணக்காளரின் கீழ் வேலைசெய்யும் வாய்ப்பு.

தொடர்புகளுக்கு 0777299386

---

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள **Software and Web Developement** நிறுவனத்திற்குச் சகல நிலைகளுக்குமான ஆள் சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பயிற்சிபெற விரும்புபவர்கள் உங்களின் சுயவிபரக் கோவையினை **onlinew4u@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (மின்னஞ்சலின் **subject** இல் **Software and Web Developement** குறிப்பிட்டு அனுப்பவும்)

---

விளம்பரம் சேகரிப்பாளர் **(Advertisement Collector)** முழுநேர, பகுதிநேர வேலைவாய்ப்பு - அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

---

வாகனச் சாரதிக்கான வேலைவாய்ப்பு. **light vehicle driving license - B, C, G1** சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0770684905

---

### SALE விற்பனைக்கு

தரமான சுவையான குறிஞ்சிக் கோப்பி விற்பனைக்கு உண்டு. மலையகத்தில் இருந்து பெறப்பட்ட தரமான கோப்பியில் இருந்து சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாணச் சுவையுடனான கோப்பிகள் 100g **Tin**களில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு 0764438620

---

கறுவாக் கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. யாழ்ப்பாணத்துச் சீதோஸ்ணத்தில் வளரக்கூடிய கறுவாக் கன்றுகள். 2 கன்றுகள் அடங்கிய பை 150 ரூபாய் மட்டுமே. தொடர்புகளுக்கு - 0766482303

---

வீட்டுத் தோட்ட விதைகள் விற்பனைக்கு உள்ளன - 0763352782 - கிளிநொச்சி

---

சுத்தமாகத் தயாரிக்கப்பட்ட நவதானியங்கள் அடங்கிய சத்துமா விற்பனைக்கு உண்டு. - 0760225528 மன்னார்.

---

புரோட்டின் நிறைந்த கச்சான் லட்டுக்களைப் பெற்றுக் கொள்வதற்கு - 0777 421896 கிளிநொச்சி.

---

அனைத்து வகையான வடகங்கள் மற்றும் மூலிகைப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள - 0779151820 கிளிநொச்சி.

---

பாரம்பரிய முறையில் தயார் செய்யப்பட்ட சுத்தமான தேங்காய் எண்ணெயை பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் அழைக்க வேண்டிய இலக்கம். - 0766982219 யாழ்ப்பாணம்.

---

மூலிகைகளால் தயாரிக்கப்படும் சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு - 0773972309 மன்னார்.

---

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் பத்திக் துணிகளையும் ஆடைகளையும் கொள்வனவு செய்வதற்குத் தொடர்புகொள்ளவும் - 0776126448

வாரஇதழ்...

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

| கறுப்பு வெள்ளை விளம்பரம் | |
|---|---|
| வரி விளம்பரம் | இலவசம் |
| பெட்டி விளம்பரம் | 600.00 |
| ¼ பக்கம் | 3,500.00 |
| ½ பக்கம் | 6,000.00 |
| முழுபக்கம் | 10,000.00 |

| வர்ண விளம்பரம் | |
|---|---|
| பெட்டி விளம்பரம் | 900.00 |
| ¼ பக்கம் | 5,000.00 |
| ½ பக்கம் | 9,000.00 |
| முழுபக்கம் | 16,000.00 |

தமிழர் பொருண்மியம் வாரஇதழில் உங்கள் விளம்பரங்களை வெளியிட

0777 27 69 49 | 076 443 8622

#68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

## வரி விளம்பரம் classified advertisement




பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப் பைகளை மிகத் தரமானதாகவும் குறைந்த விலையிலும் பெற்றுக்கொள்ள அழையுங்கள். - 0772034807

-------------------------------------

கிளிநொச்சியில் நியாயமான கட்டணத்தில் வடி ரக வாகனத்தை வாடகைக்கு அமர்த்தலாம். - தொடர்புகளுக்கு - 0776199969

-------------------------------------

ஆரோக்கியமான சிறந்த சருமத்தையும் அழகையும் முகப்பொலிவையும் பெற்றுக்கொள்வதற்கு மூலிகை மூலம் தயாரிக்கப்பட்ட சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்ள எங்களை அழைக்கலாம். எங்களது உற்பத்திகளுக்கு நாங்களே உத்தரவாதம். 0763352782

-------------------------------------

நீங்கள் ஒரு தொழிலைத் தொடங்குவதற்கு ஆர்வமாக இருக்கிறீர்களா? எப்படி தொழிலை ஆரம்பிப்பது என்ற குழப்பம் உங்களுக்கு இருக்கிறதா? இன்றே எங்களை நாடுங்கள். உங்களது முதலீட்டிற்கு ஏற்ப சிறந்த வியாபாரத் திட்டத்தினை உருவாக்கித் தருவதோடு தொழில் தொடர்பான ஆலோசனைகளையும் உங்களுக்கு வழங்க முடியும். - 0753780530

-------------------------------------

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய தரத்திலான கருவாடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு அழைக்கவும். 0778412785

-------------------------------------

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட சிறந்த ஔடதங்களைப் பெற்றுக் கொள்ள எங்களை அழைக்கவும் 0766996628

-------------------------------------

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மிக்சிகளுக்குரிய (கிரைண்டர்) பாட்ஸ்களும் (Parts), சைக்கிள் (Cycle) உதிரிப் பாகங்களும் (Parts) மொத்தமாக விற்பனைக்குள்ளன.

தொடர்புகளுக்கு - 077 6566508.

-------------------------------------




### காணி விற்பனைக்கு

மலையகத்தில் அப்புத்தளை நகரிற்கு அருகில் 20 பேர்ச் - 40 பேர்ச் காணிகள் விற்பனைக்கு. விடுமுறை வீடு, விடுமுறை விடுதி ஆகியவை அமைக்க ஏற்ற சூழல். மண்சரிவு மற்றும் வனவிலங்கு அபாயம் அற்ற பகுதி. பாதுகாப்பு, பராமரிப்பு, உரிய அனுமதிகள் என்பன ஏற்பாடு செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு 0777435557

-------------------------------------

A9 வீதியில் இருந்து 1km தூரத்தில் எழுதுமட்டுவாழ் - நாகர்கோவில் வீதியில் 2 பரப்பு, 4 பரப்புக் காணிகள் விற்பனைக்கு. இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுக் காலத்தினை அமைதியாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்வதற்கு ஏற்ற இடம். தொடர்புகளுக்கு 0779789177

-------------------------------------




### தேவை

மூலிகைத் தோட்டம் ஒன்றை மேற்பார்வை செய்வதற்கு ஓரளவு மூலிகைகளைப் பற்றிய அறிவும் தேக ஆரோக்கியமும் உள்ள ஒருவர் தேவை - 0772034807

-------------------------------------

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபலமான பத்திரிகை நிறுவனத்திற்குச் சந்தைப்படுத்தல் முகாமையாளர் தேவை - 0773078799

-------------------------------------

திருநெல்வேலியில் உள்ள அப்பக்கடை ஒன்றிற்கு அப்பம் சுடுவதற்கு ஒருவர் தேவை. சம்பவம் பேசித் தீர்மானிக்கலாம். 077 118 1590

-------------------------------------

பண்ணை வேலைக்கு ஆள் தேவை. சம்பளமாகச் சுமார் 55,000/= வீடு கொண்டு செல்லக்கூடியதாகவும் EPF&ETF முழுவதும் எம்மால் கட்டப்படுவதுடன் உணவும் எம்மால் வழங்கப்படும். (தங்கி நின்று வேலைசெய்வதுடன் மாத விடுமுறையில் வீடு சென்று வரலாம்) தொடர்புக்கு 0773024473

-------------------------------------

இயந்திர மூலம் குழாய்க் கிணறு அமைத்துத் தரப்படும். 0775652282

-------------------------------------

கிளிநொச்சி - அக்கராயனில் சோளன் பொத்திகளைச் சந்தைப்படுத்த முடியாமல் விவசாயி, கிருஸ்ணபிள்ளை கரன் என்பவர் அவதிப்படுகிறார். இன்னும் ஐயாயிரம் (5000) பொத்திகள் அவரிடம் உண்டு. தேவைப்படுபவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளுங்கள்.

Krishnapillai Karan - 0773853765

-------------------------------------



### கல்வி

இம்முறை க.பொ.த(சா.த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான தமிழ் மொழிப் பாடத் துரித மீட்டல் புலனக்குழுவில்(WhatsApp group) இணைய அனுமதிக்கட்டணம் 500/= மட்டுமே! [இலவச வகுப்புகள்- வரையறையற்ற கற்றல்- வித்தியாசமான கற்றல்- நவீன கற்றல்- எதிர்பார்க்கும் பெறுபேறு உறுதி.

தொடர்புகளுக்கு: - அ.வே.கோகிலன் - 94717326587

-------------------------------------

சிறந்த இசையமைப்பாளரால் ஓகன் வாத்தியம்கற்பிக்கப்படுகிறது. - 0772469113



# பொருண்மியம் விருதுகள் - 2023



எமது நாட்டின் பொருளாதாரப் பங்காளர்களாய் இருக்கும் தொழில் முயற்சியாளர்கள், மற்றும் கண்டுபிடிப்பாளர்களைக் கௌரவித்து பெருமைப்படுத்தும் நோக்குடன் “கிரீன் மீடியா” நிறுவனத்தின் தமிழர் பொருண்மியம் வார இதழ் சிறப்பு விருதுகளை வழங்கவுள்ளது. எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்தில் தமிழா பொருண்மியம் நடத்தும் “கோடைக் கொண்டாட்டம்“ நிகழ்வில் இந்த விருதுகள் வழங்கப்படவுள்ளன.

இவ் விருதுகளை பெற்றுக்கொள்ள தகுந்தவர்கள் என்று நீங்கள் கருதும் தொழில் முயற்சியாளர்களை, அவாகள் குறித்த சிறிய குறிப்போடு நீங்களே எங்களுக்கு சிபார்சு செய்யலாம்.

இதற்காக நீங்கள் செய்யவேண்டியது இதுதான். நீங்கள் சிபார்சுசெய்யும் தொழில் முயற்சியாளர் அல்லது கண்டுபிடிப்பாளரின்,

- பெயர்
- முகவரி
- மேற்கொள்ளும் தொழில் முயற்சி
- தொலைபேசி இலக்கம்
- விருதுக்காக நீங்கள் சிபார்சு செய்பவர் பற்றியதான சிறிய குறிப்பு என்பவற்றை எமக்குத் தெரியப்படுத்துங்கள்.

அத்துடன் உங்கள் பெயர். தொடர்பிலக்கம் என்பவற்றையும் தெரியப்படுத்துங்கள்.

## பொருண்மியம் சிறப்பு விருதுகள் பின்வரும் பிரிவுகளில் வழங்கப்படும்

1. சுய தொழில் முனைவோர் விருது
2. இளம் தொழில் முனைவோர் விருது
3. சிறந்த பெண் தொழில் முயற்சியாளர் விருது

உணவு உற்பத்தி, பாரம்பரிய கைத்தொழில்கள் (நெசவு, நூல் துணிகள், வாழை நார் உற்பத்தி, பனம்பொருள் உற்பத்தி போன்றன)

குடிசைக்கைத்தொழில்கள் (கைவினைப்பொருட்கள், ஆடை அணிகலன், பாதணிகள், சவர்க்காரம், போன்றன)

4. சிறந்த கண்டுபிடிப்பாளர் விருது

கண்டுபிடித்த உபகரணம் தற்போது பொதுப் பாவனையில் இருக்க வேண்டும், அத்துடன் எமது பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு உதவுவதாகவும் இருக்க வேண்டும்.

5. பெருந்தொழில் முயற்சியாளர் விருது

பிரதேச சபை மற்றும் மாவட்ட/அல்லது கம்பெனி பதிவுகளை கொண்டிருக்க வேண்டும்.


**சமூக அக்கறை மற்றும் சமூகத் தொண்டுகள் மேலதிக தகைமையாக கருதப்படும். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.**

**விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி 30.07.2023**

கீழ்காணும் மின்னஞ்சலுக்கு உங்கள் தகவல்களை அனுப்ப முடியும் - Tamilseconomy@gmail.com

மேலதிக தகவல்களுக்காக தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம்.
**0777276949**

# உத்தேச வேலைவாய்ப்புச் சட்டத்தில் உள்ள 34 புதிய முக்கிய அம்சங்கள்






AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

இலங்கையின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் தொழிலாளர் அமைச்சு உத்தேச வேலைவாய்ப்புச் சட்டத்தின் 34 முக்கிய விடயங்களை அண்மையில் வெளியிட்டது. தற்போதுள்ள தொழிலாளர் சட்டங்களில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைக் கொண்டுவருதல், ஒழுங்குமுறைகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் பல்வேறு துறைகளில் உள்ள தொழிலாளர்களுக்கு நியாயமான மற்றும் சமமான கையாளும் முறைமையினை உறுதி செய்வதனை இந்தச் சட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

தொழிலாளர் சந்தையின் வளர்ச்சியடைந்து வரும் பல மாற்றங்கள் மற்றும் மிகவும் விரிவான சட்டக் கட்டமைப்பின் தேவைக்குப் பதிலளிக்கும் வகையில் இலங்கை அரசாங்கம் வேலைவாய்ப்புச் சட்டத்தை உருவாக்கத் தொடங்கியது. புதிய சட்டம் தற்போதுள்ள பல தொழிலாளர் சட்டங்களை மாற்றுவதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது முதலாளிகள் மற்றும் பணியாளர்கள் இரு பகுதியினரும் தொழிலாளர் தொடர்பான ஒழுங்குமுறைகளைப் புரிந்து கொள்வதையும் பின்பற்றுவதையும் எளிதாக்குகிறது.

உத்தேச வேலைவாய்ப்புச் சட்டத்தின் முதன்மை நோக்கங்கள்- ஒழுக்கமான வேலையை ஊக்குவிப்பது, தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது மற்றும் இலங்கையில் பொருளாதார வளர்ச்சி மற்றும் முதலீட்டுக்கு உகந்த சூழலை வளர்ப்பதாகும். தொழிலாளர் சட்டங்களை ஒத்திசைப்பதன் மூலம் தொழிலாளர்கள் மற்றும் முதலாளிகளின் நலன்களுக்கு இடையே சமநிலையை ஏற்படுத்த அரசாங்கம் முயல்வதோடு நிலையான வளர்ச்சி மற்றும் சமூக நீதியை உறுதி செய்கின்றது.

உத்தேச வேலைவாய்ப்புச் சட்டத்தில் உள்ள 34 முக்கிய அம்சங்களை முன்னிலைப்படுத்தி வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் தொழிலாளர் அமைச்சகம் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது. மேலும், இலங்கையில் ஒரு புதிய ஒருங்கிணைந்த தொழிலாளர் சட்ட அமைப்பை அறிமுகப் படுத்துவதில் அமைச்சகம் தீவிரமாகச் செயற்பட்டு வருகிறது.

அமைச்சகத்தின் கூற்றுப்படி, முன்மொழியப்பட்ட வேலைவாய்ப்பு சட்டத்தில் உள்ள 34 முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

1. வேலைவாய்ப்பில் அல்லது பணியிடத்தில் பாகுபாடு காட்டப்படுவதைத் தடுக்கச் சட்ட விதிகளை அறிமுகப்படுத்துதல்.

2. பணியிடத்தில் அனைத்து வகையான துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறைகளைத் தடுப்பது தொடர்பான சட்ட விதிகளை அறிமுகப்படுத்துதல். (No- C190, வன்முறை மற்றும் துன்புறுத்தல் உடன்படிக்கையை இலங்கையில் அனுமதித்தல்).

3. தொழில்சார் பாதுகாப்பு, சுகாதாரம்






மற்றும் ஊழியர்களின் நலன் (OSH) தொடர்பான புதிய சட்ட விதிகளை அறிமுகப்படுத்துதல் (பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலன்புரி தொடர்பான ஒப்பந்த எண் - C155 l இலங்கையில் அனுமதித்தல்)

4. பணிக்கொடை (Gratuity) வழங்குவதில் ஏற்கனவே உள்ள கட்டுப்பாடுகளை நீக்குதல் (5 ஆண்டுகள் தொடர்ந்த சேவை மற்றும் 15 ஊழியர்களின் எண்ணிக்கை நீக்குதல்).

5. இரவு நேரத்தில் தொழிற்சாலை மற்றும் வணிக நிறுவனங்களில் பணிபுரியும் ஆண் தொழிலாளர்களுக்கு ஒரு கட்டண முறையை அறிமுகப்படுத்துதல் (தற்போது பெண் தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்கப்படுகிறது)

6. பணி விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பான ஊதிய வாரியங்கள் ஆணை (Wages Boards Ordinance) மற்றும் கடை மற்றும் அலுவலகப் பணியாளர்கள் சட்டத்தின் (Shop and Office Employees Act) விதிகளுக்கு இடையே உள்ள வேறுபாடுகளை நீக்கி அனைத்து ஊழியர்களுக்கும் ஒரே மாதிரியான ஏற்பாடுகளை உருவாக்குதல்.

7. தற்காலிக வேலைவாய்ப்பில் பணியமர்த்தப்பட்டவர்களைத் தவிர ஆட்சேர்ப்பின்போது அனைத்து ஊழியர்களுக்கும் வேலைவாய்ப்புக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய நியமனக் கடிதத்தை எழுத்து பூர்வமாக வழங்குமாறு பணியமர்த்துபவர்களைக் கட்டாயப்படுத்துதல்.

8. ஊழியர்களின் தேவைகளுக்கு ஏற்ப வாரத்திற்கு 05 நாட்கள் மற்றும் மாற்றிக் கொள்ளக்கூடிய பணி நேரங்களை (Flexible working hours) அறிமுகப்படுத்துதல்.

9. சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு பெண் ஊழியர்களின் இரவுப் பணிக்குத் தற்போதுள்ள சட்டத்தில் உள்ள சட்ட விதிகளைத் தளர்த்துதல்.

10. கூடுதல் நேர வேலை நேரம் மற்றும் செலுத்த வேண்டிய கணக்கீடுகள் குறித்து சீரான அமைப்பை அறிமுகப்படுத்துதல்.

11. பகுதி நேர வேலைவாய்ப்பு (Part-time employment) தொடர்பான சட்ட விதிகளை அறிமுகப்படுத்துதல்.

12. பயிற்சி பெற்றவர்கள், பயிற்சி பெறுபவர்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் படிக்கும்போது பணிபுரிபவர்கள் (Apprentices) தொடர்பான சட்ட விதிகளை அறிமுகப்படுத்துதல்.

13. மகப்பேறு விடுமுறை (Paternity leave) தொடர்பான சட்ட ஏற்பாடுகளைச் செய்தல்.

14. வீட்டிலிருந்து பணிபுரியும் ஊழியர்களின் (Work from home) உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றிய சட்ட விதிகளை அறிமுகப்படுத்துதல்.

15. வெளிநாட்டு ஊழியர் ஒருவரை இலங்கையில் பணியமர்த்துவதில் பின்பற்ற வேண்டிய நடைமுறையை அறிமுகப்படுத்துதல்.

16. தொழிலாளர் சட்டத்தின் கீழ், வீட்டு வேலைகளைச் (Domestic Work) சேர்த்தல்.

17. ஊதிய வாரியத்தின் முடிவுகள் மற்றும் சட்டப்பூர்வ சட்டத்தின் மூலம் குறைந்த பட்ச ஊதிய நிர்ணய முறைக்குப் பதிலாகத் தேசிய ஊதியக் குழுவை அறிமுகப்படுத்துதல், சமகால மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட அளவுகோல்களின்படி குறைந்த பட்ச ஊதியத்தை நிர்ணயிக்க அந்த அமைப்புக்கு அதிகாரம் அளித்தல்.

18. ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் ஊழியர்களின் தவறான நடத்தை தொடர்பான இறுதி ஒழுங்கு முடிவுகளை வழங்குவதற்கு முதலாளிகள் மீது சட்ட பூர்வ கடமையை நிறுவுதல்.

19. முதலாளிகளின் நியாயமற்ற தொழிலாளர் நடைமுறைகள் (Unfair labor practices) தற்போது சட்டத்தால் தடைசெய்யப்பட்டுள்ளதைப் போலவே தொழிற்சங்கங்களின் நியாயமற்ற தொழிலாளர் நடைமுறைகளும் சட்டத்தால் தடை செய்யப்பட வேண்டும் என்ற விதிகளை அறிமுகப்படுத்துதல்.

20. நியாயமற்ற தொழிலாளர் நடைமுறைகள் மீதான விதிகளை மீறி நீதிமன்றத்தில் இரு தரப்பினரும் நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கான வாய்ப்பை உருவாக்குதல்.

21. தொழிற்சங்க உறுப்பினர் கட்டணத்தை ஊதியத்திலிருந்து கழித்து தொழிற்சங்கங்களுக்கு அனுப்புவதை முதலாளிக்குக் கட்டாயமாக்குதல்.

22. தொழிற்சங்கம் அமைப்பதற்குத் தேவையான குறைந்தபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கையை 7இல் இருந்து அதிக எண்ணிக்கையாக உயர்த்துதல்.

23. தொழிற்சங்கத்தின் நிர்வாகக் குழுவில் குறிப்பிட்ட சதவீதப் பெண்களின் கட்டாயப் பிரதிநிதித்துவம்.

24. வேலைநிறுத்தம் தொடங்கும் திகதிக்கு முன்னதாக முதலாளிக்கு அறிவித்தல். மற்றும் வேலைநிறுத்தத்திற்கான உறுப் பினர்களின் பெரும்பான்மை ஒப்புதலைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்தல்.

(23ஆம் பக்கம் பார்க்க)

> ‘ உத்தேச வேலைவாய்ப்புச் சட்டத்தின் முதன்மை நோக்கங்கள்- ஒழுக்கமான வேலையை ஊக்குவிப்பது, தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது மற்றும் இலங்கையில் பொருளாதார வளர்ச்சி மற்றும் முதலீட்டுக்கு உகந்த சூழலை வளர்ப்பதாகும். ’

# யாழ்ப்பாணத்தில் தயாராகும் இறப்பர்க் காலணிகள்!



நேர்கண்டவர் - ஞா.கவினி

யாழ்ப்பாணத்தில் இறப்பர்க் பாதணிகளினை உருவாக்கி வருகின்றனர் சித்தங்கேணியில் இயங்கும் அந்திரான் ஜனசக்தி தோற்பொருள் உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்தினர். பெண்களுக்கான ஒரு தொழில் முயற்சியாகவே இந்த இறப்பர்க் பாதணிகள் உற்பத்தி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கூட்டுறவு அமைப்புகளைப் பலப்படுத்தும் திட்டங்களில் ஒன்றாக இது முன்னெடுக்கப்பட்டுப் பெண்களின் வாழ்வாதாரத்தை அடிப்படை நோக்கமாகக் கொண்டு பாதணிகளின் உற்பத்திக்குத் தேவையான பயிற்சிகளை வழங்குதல், சந்தைப்படுத்தல் ஆலோசனைகளை வழங்குதல், மூலப் பொருட்களைக் கொள்வனவு செய்தல் போன்ற தேவைகளுக்கென ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் 3.45 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

தென்னிலங்கையைச் சேர்ந்த நிறுவனம் ஒன்றால் வட்டு. கிழக்கு மாதர் அபிவிருத்திச்சங்கக் கட்டிடத்தில் 14 பெண்களுக்குப் பாதணி உற்பத்தி தொடர்பான முழுமையான பயிற்சிகள் ஒருமாத காலமாக வழங்கப்பட்டது. இதனையடுத்துக் கிராமத்துப் பெண்களால் ஆரம்பிக்கப்பட்ட உற்பத்திகள் இரட்டிப்பு வேகத்தில் சென்று கொண்டிருக்கின்றது என்பது மிகவும் மகிழ்ச்சியான விடயம்.



தற்போது மனதைக் கவரும் பலவித வண்ணங்களிலும், பல அளவுகளிலும் உருவாக்கப்படும் இறப்பர் பாதணிகளுக்கு 'ஏஆர்பீ' (ARP -Anthiran Rubber Products) எனப் பெயரிடப்பட்டுள்ளது. இவை மிகத் தரம் வாய்ந்த காலணிகளாக இருப்பதோடு சந்தையில் இவற்றுக்கான கேள்விகளும் அதிகமாகக் காணப்படுகின்றன. சிறுவர்கள் தொடக்கம் பெரியவர்கள் வரை அணியக்கூடிய மிகப் பொருத்தமான காலணிகளை எமது பெண்கள் உற்பத்தி செய்து வழங்குவது என்பது நமது சமூகத்தின் பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் ஒரு மிகச்சிறந்த செயற்பாடாகவே காணப்படுகிறது. சந்தை வாய்ப்பு என்பது இவர்களுக்கு ஒரு சவாலான விடயமாகக் காணப்படவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் அரிதாகவே வடக்கில் உருவாக்கப்படுகின்ற பாதணிகளில் இவர்களுடையதும் ஒன்றாக இருக்கின்றது.

உள்ளூர் உற்பத்தியும் சமூக ஒற்றுமையும் இவற்றை நாங்கள் பெரும் சாதனைகளாகப் பார்க்கவில்லை. எங்களுடைய பிரதேசத்தின் சமூகத்தின் பொருளாதார வளர்ச்சியாக நோக்குகிறோம் என்கின்றனர் இந்தத் தொழில் முயற்சியில் ஈடுபட்டுள்ள பெண்கள். இவ்வாறு சமூகத்தை மேம்படுத்தும் வேலைத் திட்டங்களைப் பிரதேசங்களுக்குள் கொண்டு வரும்போது அந்தப் பிரதேசவாசிகள் தமது பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ளவும் தேவையற்ற விடயங்களில் இருந்து விலகிக் கொள்ளவும் வழிவகுக்கிறது.

எமது காலணிகளை உற்பத்தி செய்வதற்கு எமது கிராமத்தில் உள்ள சமூக மட்ட அமைப்புகள் கிராமம் மட்டுமே அமைப்புகள் எனப் பலரும் மிகவும் உறுதுணையாக இருக்கின்றனர். பெண்கள் ஒன்று சேர்ந்து இந்தத் தொழிலைச் செய்தாலும் எங்களுக்கு பக்க பலமாக எமது கிராமத்து மனிதர்கள் அனைவரும் இருப்பது நமக்கு மகிழ்ச்சியைத் தரக்கூடிய ஒரு விடயம் என்று உற்பத்தியாளர்கள் வட்டம் கூறுகின்றது.

இதுதான் எமது கனவு.

உண்மையிலேயே எங்களுக்கு இதனை இன்னும் விருத்தி செய்து இன்னும் பலருக்கு வேலை வாய்ப்பை வழங்க வேண்டும் என்ற எண்ணமும், நமது உற்பத்தி பொருட்கள் நாடு எங்கிலும் விநியோகிக்கப்பட வேண்டும் என்கின்ற கனவும் இருக்கின்றது. நிச்சயமாக அது நிறைவேறும் என்று நம்புகிறோம். எங்களது கனவு மெய்ப்படும் அந்த நேரத்தில் எங்களது பாதணித் தொழில் கூடமானது மிகவும் வளர்ச்சி அடைந்திருக்கும். எமது பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கு மிகவும் இலகுவான வழிகளை நாங்கள் கண்டுபிடித்திருப்போம் என்கின்றனர் பாதணி உற்பத்தியாளர்கள்.

**“இவற்றை நாங்கள் பெரும் சாதனைகளாக பார்க்கவில்லை. எங்களுடைய பிரதேசத்தின் சமூகத்தின் பொருளாதார வளர்ச்சியாக நோக்குகிறோம் என்கின்றனர் இந்தத் தொழில் முயற்சியில் ஈடுபட்டுள்ள பெண்கள். இவ்வாறு சமூகத்தை மேம்படுத்தும் வேலைத் திட்டங்களை பிரதேசங்களுக்குள் கொண்டு வரும்போது அந்தப் பிரதேசவாசிகள் தமது பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ளவும் தேவையற்ற விடயங்களில் இருந்து விலகிக் கொள்ளவும் வழிவகுக்கிறது.”**



# (ஏ)மாறியது நெஞ்சம்



- தமிழ்க்கவி -

## எங்கள் வாழ்வும் வளமும்

“சங்கீதா வீட்டில கலியாணமாம். அதான் அவளின்ர பெடிச்சி மேனகாவுக்கு” என்ர பேத்தி சொல்ல, எனக்கு பயமாக்கிடக்கு. என்ன இனி இந்தக் கலியாணத்தைச் சாட்டி எங்கட வீட்டில கரையப் போற காசையும், நேரத்தையும் அதைச்சாட்டி வரப்போற சின்னச்சின்ன வாக்குவாதங்களையும் சச்சரவுகளையும் நினைச்சுத்தான்.

‘கலியாணங்கலியாணம்காரிழைக்கோ கலியாணம். கலியாணம் எண்டு சொல்லி கடலேறிப்பாக்கு வைச்சா’ அப்ப பாக்கு வெத்திலை வச்சு அழைப்பினம் இப்ப ‘காட்’ வைக்கினம்.

போன கிழமைதான் என்ர பரம்பரை நகை பத்திரம் எண்டு நான் குடுத்த அட்டியலை பாசன் மாறிப்போச்செண்டு மாத்தி வேற நகை வாங்கிப் போட்டாள். ஆரெட்ட சொல்லி அழ. ‘அழுவாரும் அழுவாரும் தன் கரைச்சல் திருவன் பெண்டிலுக்கு கட்டியழ ஆளில்லயாம்” நான் என்னவோ பறைய வெளிக்கிட்டு எதிலயோ நிக்கிறன். மெய்யே இப்பத்தைய கலியாணங்கள் என்ன கலியாணமாவே நடக்கிது. கலியாண வீட்டுக்காறற்ற சிலவு சித்தாயமெல்லாங் கேள்விப்பட்ட உடன நான் என்ர பேத்திக்குச் சொல்லி ஆறுவமெண்டு நெச்சன். “மெய்யேடி பிள்ளை ஒரு தம்பதி வாழப்போறதுக்கு உவள தூரம் சிலவழிக்க வேணுமே. அந்தப்பணத்தை அதுகளின்ர கையில குடுத்தா வாழ்க்கைய ஆரம்பிக்க பெரிய முதலீடா இருக்குமெல்லே” எண்டன்.

“நல்ல திட்டமெணை ஆனா இந்த சிலவில எத்தின பேற்ற உழைப்பிருக்கு தெரியுமெல்லே” நான் அசந்துதான் போனன். ஆனாப்பாருங்கோ சோத்துக்கு வழியில்லாம சோந்து போய் இருக்கிறவனுக்கு ஒருநாள் கூலி குடுக்கயுக்க பல மாதிரியும் அவன வெருட்டி என்னடாப்பா உவள வேலைக்கே உந்தக்கூலி கேக்கிறாய் பிடி பிடி காணும் கொண்டு போ எண்டு கலைக்கிறவை அவன்ர கூலியில அம்பது ரூவா வெட்டிற்றத நெச்சு பெரிய விலாசமடிக்கிற காலம். இஞ்ச பாத்தா நீங்கள் குடுக்கிறதெல்லாம் பெரிய முதலாளிமாருக்கு எங்கே ஒரு ரூவாக்குறைச்சுப் பாருங்க பாப்பம். முடியாவே முடியாது.

ஏக்கர் கணக்கில காணி இருக்கும். அதுக்க ஒரு பந்தலப் போட்டு நடத்தினா மதிப்பில்லயாம. மண்டபம் புக் பண்ணி அதென்ன நாளெண்டாலும் பரவாயில்லை அங்கதான் கலியாணம் செய்ய வேணும். இப்ப கலியாணத்தோட சேத்து மேலதிகமாகவும் சடங்குகள உருவாக்கியிருக்கினம். ஆரோ எட உந்த சீரியல்காறர்தான். சாப்பாட்டுக்கே அல்லாடுற குடும்பமா இருந்தாலும் லச்சக்கணக்கில் புடவையள் வாங்கக் கடைக்கு போவினம். அதுகும் ஒரு விளம்பர சேவைதான் எண்டது விளங்காம நாங்களும் நாக்கத் தொங்கப் போட்டுக்கொண்டு பாப்பம். அங்கால நகைக்

கடை, பிறகு நலுங்கு பிறகு 'சங்கீத் பங்சன்.' இது வடநாட்டால வந்தது. அடபாவிகளா இதெல்லாம் அவங்கள் வாங்குற காசுக்குச் செய்யிற விளம்பரம்.

நாங்கள் தமிழர் எங்கட கலியாணத் தில மாப்பிளை பட்டு வேட்டி சால்வை தலைப்பாகை எண்டு வாறதுதான் முறை. இப்ப பார்ரா குர்தா போட்டுக்கொண்டு பாய் மாதிரி வாறாங்கள். எங்கட செல்லம்மா கிழவி என்ன சொன்னது தெரியுமே 'ஏனணை கலியாண மாப்பிளை சுடிதார் போட்டிருக்கிறார்' எண்டு. 'பேய்மனுசி அது குர்தா' எண்டன். தம்பீ உவள சொல்லு றனே எங்கட தமிழற்ற காலத்தில தாலி கிடையாது கண்டியோ அதையே நாங்கள் படங்கள்ள பாத்துத்தான் கட்டினது. 'தாலி பெண்ணுக்கு வேலி' எண்டொரு சினி மாப்படம் வந்த பிறகுதான் எங்கட சனம் அதை இறுக்கிப் பிடிச்சது. நாள்ச் சோறு குடுக்கிறது எண்டொரு சடங்கு முன்னைய கலியாணத்தில. அதுதான் மெயின் சடங்கு அப்ப நாங்கள் வயசுப் பிள்ளையளா இருக கயுக்க ஆருக்கும் இளந்தாரியளுக்கு சோறு பரிமாற விடமாட்டினம். இந்தக் கலியா ணச்சடங்கிலதான் முதல் முதலா மாப்பிள் ளைக்கு மனைவியாப் போற பிள்ளை சோத்தப்போட்டு குடுப்பா. அதுதான் கலி யாணச்சடங்கு.



ஊரவை முழுக்க வந்திருந்து கூடமாட சாப்பிட்டு வாழ்த்தி பரிசுகளும் குடுப்பினம். பரிசெண்டா பணம் மட்டுந்தான். ஒரு பந் தல் அதுகும் ஊராக்களே கூடி ஆளுக்கொரு வேலையாச் செய்து கட்டி அலங்காரம் பண்ணிவிடுவினம். அதுக்கு முதல் கட்டாடி வெள்ளைகட்டி விடுவான். பணமுள்ளவை இதோட தாலிகட்டும் வரைக்கும் நட்டுவ மேளம் பிடிப்பினம். அவ்வளவுதான் கலி யாணம் முடிஞ்சுது. அப்பிடி ஊருக்கூர் வீட்டுக்கு வீடு போய் ஓமம்வளத்து மந் திரஞ்சொல்லி தாலிகட்டுற அளவுக்கு ஐயர் மாரும் அப்ப இல்லை. நாலு பெரிய மனிசர் கூடி செய்து வைக்கிறதுதான். விதானை யார் வருவார் தன்ர புத்தகத்தில இதை குறிப்பார். நாங்கள் விரும்பினா றிசிட்டா ரிட்ட போயோ அல்லது அவர வீட்ட கூப் பிட்டோ கலியாணத்தைப் பதிவு பண்ண லாம். அவ்வளவுதான்

கதையோட கதை அப்பிடிக் கலியா ணத்தை எழுதுறது ஆரெண்டா ஆரும் வெளியில பேசி கலியாணம் செய்யிற வைதான். மற்றவை எழுதிறது அருமை.



அவை சொந்தத்துக்கயே பேசி செய்யி றதுதானே. ஒரு ரகசியம் உந்த இனக்கல வரம் துவங்கிப் படுகொலையள் நடந்து தெல்லே அதுக்கும் பிறகுதான் கலியா ணத்தைப் பதிவு பண்ண வேணுமெண்ட ஞானம் சனங்களுக்கு வந்தது அது ஒரு பெரிய கதை அதை பிறகு சொல்லுறன்.

என்ர கலியாணச் சிலவு நாலு கோழிச் சேவல். நூத்தம்பது ரூவாகாசு. அதிலும் பரிசாக வந்தபணம் எண்பது. மீதிதான் கைப்பொறுப்பு பெறுமதி தெரிய வேணு மெண்டதுக்காக சொல்லுறன் அப்ப தங்கப் பவுண் ஒண்டு அறுவது ரூவா. அக்கா வின்ர கலியாணத்துக்கு அதுகும் இல்லை.

மாமியாக்கள் வந்தவை மற்ற எங்கட குடும்பந்தான் சோத்தக்குடுப்பிச்சு சேத்து விட்டாச்சு. கலியாணச்சிலவுக்கு வச்சிருந்த காசில ஒரு 'வுல்சிலி' தண்ணி இறைக்கிற மிசின் வாங்கி குடுத்ததுதான். அவை தோட்டஞ்செய்து தாங்களா முன்னேறிச் சினம். காதலிக்கிறவையை கண்டு பிடிச்சா ஊரவை கூடித் தப்பு நடக்க முதல் சோத் தக்குடுப்பிச்சு விட்டதும் நானறிய நடந்தது.

ஒரு ஆணும் பெண்ணும் சேருறது மனசார ஒரு அந்தரங்கமான உறவுதானே அதை என்னத்துக்கு படம் போட்டு காட்ட வேணும். பல லட்சக்கணக்கில சிலவு செய்து அதை ஒரு ஏழைபாழையளின்ர நல் வாழ்க்கைக்கு தானமாக் குடுத்தாலும் வாழ்த்திற்றுப் போகுங்கள். அதில்லாம எங்கட ஆடம்பரத்தால இல்லாத சனத் தின்ர வயித்தெரிச்சலை கிளப்ப வேணுமே.

துவங்கீற்றாள் வீட்டில பிரளயங் கிளம்பப் போகுது. ராசன் கேட்டதில என்ன பிழை.

"ஏனப்பா போனகிழமை பொன்னு ருக்கெண்டு புதுச்சாறி வாங்கின நீயெல்லே"

"அது அப்பவே கட்டியாச்சேல்லே இப்ப நலுங்குக்கும் அதையே கட்டினா பாக்குற சனம் என்ன நினைக்கும்."

"இப்பென்ன சொல்ல வாறாய் அதுக்கே ஐயாயிரம் ரூவாப் போச்சே"

"அதுதான் சொல்லுறன் அச்சலச்சலா போகாம ஒரேயடியா நாலு சாறி வாங்க வேணும்"

"எதுக்கு?"

"எதுக்கோ நாளைக்கு நலுங்கு, அடுத்த நாள் சங்கீத் பங்சன். அங்கால கலியா ணம் மற்றது ரிசப்சன்"

இப்ப ஆற்ற வீட்டில கலியாணம் நடந்தாலும் எல்லா வீட்டிலும் செலவுதான். இதோட சரி அந்த சாறியளெல்லாம் அதோட அடிப் பெட்டிக்க போகிடும் ஆரும் இல்லாத சனத்துக்கு குடுக்கவும் மனம் வராது.

"இன்னும் மாயா பள்ளிக்கூடத்தால வரேல்ல வந்த பிறகு மிச்சம்."

" என்ன மிச்சம் அவள் பியுட்டிபார்ல ருக்கு போகோணுமெண்டவள் ஐயாயிரம் ரூவா வேணும்."

புடவைக்கடை நகைக்கடை பியூட்டி பார்லர், பந்தல்காரர் சமையல்காரர் புகைப் பட ஒளிப்படக்காரர், மண்டபம். வாத்தியக் கலைஞர்கள். வரவேற்பு பரிசாரகம் வழி யனுப்பல். எல்லாமே லட்சக்கணக்கில சிலவுதான். ஆனா வாற சனத்தை வாங்கோ எண்டு கூப்பிட்டு இருத்த ஆளிருக்காது. செய்த சிலவில கால்பங்கும் காசுவராது. எல்லாம் பொருளாத்தான் இருக்கும் ஒரு திருமண நிகழ்வு முடிஞ்சு வந்த பரிசுப் பார்சல்களில முப்பத்திரண்டு மணிக்கூடு அறுபத்து நாலு வகை பாத்திரக்கூட்டம், பன்னிரண்டு மேசை மின்கலங்கள். என்ன கலியாணம் முடிஞ்சு கடைவைக் கப் போறாரா? அதைப் பணமா குடுத்திருந் தால் அவரது சிலவைக் கொஞ்சமாவது ஈடுகட்டியிருக்கும். இதைத்தான் எல்லாரும் சொல்லுகினம். 'ஊருக்குச் சொல்லுமாம் பல்லி களனிப்பானையில விழுமாம் துள்ளி' எண்டது போலதான் ஒவ்வொருவரும் நடக்கினம். எண்டைக்கு திருந்தப்போறி யளோ?

# நமக்குப் பிடிக்காத விஷயங்களில் நம்மால் வெற்றிபெற முடியுமா?!



நமக்குப் பிடிக்காத மற்றும் கைவராத விஷயங்களில் வெற்றி பெற முடியுமா..? கடுமையான முயற்சிகளைத் தொடர்ந்து செய்வதன் மூலம் நிச்சயம் பெரிய அளவில் வெற்றி பெற முடியும் என்று சொல்லி ஆரம்பிக்கிறது 'ஸ்ட்ரைவ்' (Strive) என்கிற புத்தகம். தென்கொரியாவில் பிறந்து தற்போது அமெரிக்காவின் நியூயார்க்கில் வசிக்கும் ஸ்காட் அமிக்ஸ் என்பவர் எழுதிய புத்தகம் இது.

'நீ ஒரு உதவாக்கரை… எதற்கும் உதவாத ஆள்' என்று உங்களை யாரேனும் சொல்லியிருக்கிறார்களா..? அல்லது குறைந்தபட்சம் உங்களைப் பற்றி உங்களுக்கு உங்களுக்கே இப்படி எப்போதாவது தோன்றியிருக்கிறதா? இந்த உலகில் இதுபோல நாம் நினைப்பதற்கான சூழல் உருவாவதைவிடக் கடினமான சூழல்கள் வெகு சிலவே உள்ளன.

லாறி எனும் நபருக்கு நடந்ததைப் பார்ப்போம். லாறியின் அப்பா, ஒரு அமெரிக்க விமானப்படை பைலட். ஒன்பது மாத குழந்தையாக இருக்கும்போது லாறிக்கு நிமோனியாக் காய்ச்சல் வந்து பாதிக்கப்பட்டார். அவருடைய அம்மா, இவ்வளவு உடல்நிலை சரி இல்லாத குழந்தையை சரியாக வளர்க்க முடியாது என்று நினைத்து, உறவினர் ஒருவருக்குத் தத்துக்கொடுத்துவிட்டார். லாறி அவருடைய 40 வது வயதுக்குப் பிறகுதான் தன் அம்மாவை நேரில் சந்தித்தார்.

லாறி மிகவும் புத்திசாலியாக இருந்தாலும் நிறையத் தகராறுகளைச் செய்யும் குணம் கொண்டவர். வளர்ப்புத்தாய் அன்பு மிக்கவராக இருந்தாலுமே வளர்ப்புத் தந்தையிடம் நல்லுறவு இல்லை.

அறிவியல் மற்றும் கணக்குப் படித்தார் லாறி. அவருக்குப் படிப்பு நன்றாகவே வந்தது. இல்லினோய்ஸ் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து படித்தார். முதல் ஆண்டின் இறுதியில் ஆண்டின் சிறந்த அறிவியல் பயிலும் மாணவர் என்ற விருது அவருக்கு கிடைத்தது. எந்த அளவுக்குப் படிப்பில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார் என்பதற்குச் சான்றாக அளிக்கப்படும் விருது அது. சோதனையாக இரண்டாம் ஆண்டில் அவருடைய வளர்ப்புத்தாய் இறந்துபோனார். பரீட்சையில் தோல்வி அடைந்து பல்கலைக் கழகத்தை விட்டு வெளியேற வேண்டிய நிலை லாறிக்கு.

மீண்டும் பெருமுயற்சி செய்து சிகாகோ பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். அங்குதான் கம்ப்யூட்டர் அவருக்குப் பரிச்சயமானது. ஒருநாளும் லாறி கம்ப்யூட்டர் பாடத்தை விரும்பித் தேர்தெடுத்துப் படித்ததே இல்லை. ஆனால், சொந்த முயற்சியில் புத்தகங்களைப் படித்து புரோக்ராம் எழுத ஆரம்பித்தார். அவருக்கு மென்பொருள் நிறுவனம் ஒன்று வேலையும் தந்தது. பல வேலைகளைப் பார்த்தபோதிலும் பெரிய சம்பளம் கிடைக்கவில்லை.

திருமணம் செய்து மனைவியுடன் சில ஆண்டுகள்தான் வாழ்ந்தார். கவுன்சலிங் எல்லாம் கொடுத்தும் எந்தப் பயனும் இல்லாமல் லாறியின் மனைவி அவரை விவாகரத்துச் செய்தார். அதன்பிறகு கம்ப்யூட்டர் நிறுவனம் ஒன்றில் பணிக்குச் சேர்ந்த லாறி, அங்குதான் தான் சொந்தமாக ஒரு நிறுவனத்தைத் தொடங்க வேண்டும் என்று நினைத்தார். ஐ.பி.எம் நிறுவனத்தின் ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றைப் படித்த அவர், அதன் உந்துதலால் தொழிலைத் தொடங்கினார்.

மனித வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் அவ்வப்போது இத்தகைய பேரறிவு வரும். அந்த அறிவைக்கொண்டும் தளராத முயற்சியைக் கொண்டும் லாறி தன்னுடைய வாழ்க்கையை மாற்றியமைக்கும் ரிஸ்க்கை எடுத்து வென்றார். தான் படித்த ஆராய்ச்சிக் கட்டுரையை வைத்து ஒரு கமர்ஷியல் சிஸ்டத்தை உருவாக்கி, ஐ.பி.எம். நிறுவனத்தையே வெல்ல வேண்டும் என்று நினைத்தார் அவர். அதைக் கனகச்சிதமாகச் செய்தும் முடித்தார்.

அவர் உருவாக்கிய சிஸ்டம் டேட்டா பேஸ் எல்லாக் கணினிகளிலும் பயன்படுத்தக்கூடியதாக இருந்தது. அவருடைய நிறுவனம் பல ஏற்ற இறக்கங்களைச் சந்தித்து வளர்ந்தது. உலகின் ஐந்தாவது பெரிய பணக்காரராக உருவெடுத்தார். அவர் உருவாக்கிய நிறுவனம்தான் 'ஆரக்கிள்.'

இந்தக் கதையைப் படிக்கும்போதே புல்லரிக்கிறது இல்லையா! ஆனாலும் இந்தக் கதையில் வெற்றிக்குத் தேவையான ஒரு சில விஷயங்கள் இல்லையே! நல்ல குடும்பச் சூழல், சிறப்பான வாய்ப்புகள், சிறந்த பயிற்சியைப் பெறக்கூடிய சந்தர்ப்பங்கள், அதிர்ஷ்டம் போன்ற எதுவும் இல்லையே… அப்படியெனில், லாறி எல்லிசனின் வெற்றிக்கு என்ன காரணம்..? அல்லது வெற்றி பெற்ற நபர்களின் வெற்றிக்கு முக்கிய மான காரணம்தான் என்ன?

பதில் தெரியவில்லையா..? தெரிந்தால் கொஞ்சம் ஆச்சரியப்படுவீர்கள். ஏனென்றால், வெற்றிக்குக் காரணமான காரணிகள் சில உங்களிடம் இப்போதே இருக்கின்றன. அப்படி எனில், ஏன் வெற்றி என்னை விட்டு விலகிச் செல்கிறது என்று கேட்பீர்கள். எக்கச்சக்கமான செல்ஃப் ஹெல்ப் புத்தகங்கள் வாங்கிப் படித்தேன். அதைச் செய், இதைச் செய் எனப் பலவற்றையும் அந்தப் புத்தகங்கள் கூறின. அவை எல்லாவற்றையும் செய்தும் பார்த்தேன். வெற்றி மட்டும் கிடைக்கவேயில்லை என்கிறீர்களா..?

செஃல்ப் ஹெல்ப் துறை பல்வேறு வகையான வழிவகைகளைக் கண்டறிந்து முன்னேற நினைக்கும் மக்களுக்கு வழிமுறைகளைக் கூறிக்கொண்டேயிருக்கின்றன. வெற்றிபெற பாசிட்டிவ் மனநிலை வேண்டும் என்று கூறுவார்கள். பத்தாயிரம் மணி நேரம் ஒரு விஷயத்தில் உழைத்தால், வெற்றி நிச்சயம் என்பார்கள். அதாவது, கிட்டத்தட்ட 417 நாள்கள் ஒரு

விஷயத்தில் திறன் வளர்க்கச் செலவிட வேண்டுமென்றால், பயிற்சி அளிப்பவர் கட்டாயம் வேண்டும்.

சரி, பத்தாயிரம் மணிநேரம் உழைத்தவர்கள் எல்லாம் வெற்றி பெற்றுவிட்டார்களா என்று கேட்டால், அதுவும் இல்லை. பலரும் கடுமையாக உழைத்த பிறகும் வெற்றி கிடைக்காமல் இருக்கவே செய்கின்றனர்.

கடுமையாக உழைத்துப் பயிற்சி செய்து திறமை வளர்த்தாயிற்று. வளர்த்த திறமையைக் காட்ட வாய்ப்புக் கிடைக்க வேண்டுமே! திறமை, பணம், பவர், புகழ் என்ற எல்லாமும் இருந்துமே தோல்வி அடைந்த நபர்கள் இந்த உலகில் இருக்கவே செய்கின்றனர். இன்றைக்கு ஆட்டோமேட்டிக் கார்கள் தயாரிக்கும் நிறுவனத்துக்கு வைக்கப்பட்டிருக்கும் பெயரான டெஸ்லாவின் (நிகோலா டெஸ்லா) வரலாற்றைப் பாருங்கள்.

நிகோலா டெஸ்லா எப்போதுமே சிறந்த முன்னோடியான அறிஞராகக் கருதப்பட்டவர். நான்கு சகோதரர்களுடன் பிறந்து வளர்ந்தார் அவர். அவருடைய தந்தை குழந்தைகள் 'பிரியமானதைப் படிக்கட்டும்' என்று விட்டுவிட்டார். அவருடைய அம்மாவுக்கு எழுதப் படிக்கத் தெரியாது ஆனாலும் பல விஷயங்களைக் கண்டறிந்ததில் முன்னோடியாக இருந்தார்.

ஒரு மனிதனாக மூன்று மணி நேரமே வாழ்நாளில் அன்றாடம் தூங்கினார் டெஸ்லா. 700 காப்புரிமைகள் வைத்திருந்தார். பேரறிவு கொண்டவராக இருந்தார். ஆனால், அவர் ஏழ்மை நிலையிலேயே தனிமையில் இறந்தார்.

இதிலிருந்து என்ன தெரிகிறது..? பேரறிவு இருந்தாலும் தொடர் முயற்சி இருந்தால் வெற்றிக்கான வாய்ப்பு வந்துசேரும் ஐன்ஸ்டீன் அளவுக்கு அறிவு இல்லாமலும், பத்தாயிரம் மணிநேரம் பயிற்சி செய்யாமலும், பெரிய பணக்காரக் குடும்பத்தில் பிறக்காமலும் இருந்தால்கூட, தொடர் முயற்சியால் வெற்றி பெற வழி இருக்கிறது என்பது தான்.

நிகோலா டெஸ்லாயின் தோல்விக்குத் தொடர் முயற்சிகள் இல்லாததே காரணம். சரியான முயற்சிகளை எடுப்பதன் மூலம் நீங்கள் உங்களுடைய வாழ்க்கையைக் கட்டுப்பாட்டுடன் சீராக நடத்த முடியும். அப்படிச் செய்வதன் மூலம் உங்களுடைய வாழ்க்கையை வெற்றிகரமானதாக ஆக்கிக்கொள்ள முடியும்" என்கிறார் புத்தகத்தின் ஆசிரியர்.

"உங்களுக்குச் சௌகர்யமான விஷயங்களை மட்டுமே செய்யாமல் ரொம்பவுமே வசதிக் குறைவான வருத்தம் தரக்கூடிய விஷயங்களைப் பெருமுயற்சி எடுத்து செய்வதன் மூலம் நீங்கள் வெற்றி பெற முடியும்.

ஜே.கே ரௌலிங் (ஹாரிபாட்டர் தொடர் புத்தகங்களை எழுதிய ஆசிரியர்) அவருக்கு நன்றாகக் கதை சொல்ல வரும் என்று தெரிந்திருந்தும், அதை விட்டுவிட்டு சுல பமாக வாழ விரும்பினார். அதற்காக பிரெஞ்ச் மொழியைப் பாடமாக எடுத்துப் படித்தார். ஏனெனில், வேலைக்குப் போய் சம்பாதிக்கலாம் நிம்மதியாக இருக்கலாம் என்கிற எண்ணமே அவருக்குள் நிறைந்திருந்தது.

ஹாரி பாட்டர் புத்தகம் எழுதும் ஐடியா அவருக்கு மனதில் வெகுகாலமாக இருந்தது. ஆனால், அது கடினமான ஒன்று. வேலைக்குப் போய் சம்பாதிப்பது சுலபமான ஒன்று என நினைத்தார். அவர் நினைத்தபடி, வேலை கிடைக்கவில்லை. தனியொருத்தியாகக் குழந்தையை வளர்ப்பது அவருக்கு சிரமமாக இருந்தது.

அந்தச் சூழ்நிலையில்தான் கடினமான வேலையாக அவர் நினைத்த கதை எழுதும் முயற்சியில் இறங்கினார். பெரிய அதிர்ஷ்டக்காரரும் இல்லை அவர். காரணம், அவர் எழுதி அனுப்பிய கதைகள் பிரசுரிக்க இயலாது என்று திரும்பி வந்து மலைபோல் குவிந்தன. பல பிரசுர நிறுவனங்கள் நிராகரித்தன. கடைசியில் ஒரு சிறு பிரசுர நிறுவனம் அவருடைய படைப்பை ஏற்றுக்கொண்டது. 'இருந்தாலும் பிழைப்புக்கு ஒரு வேலையை வைத்துக் கொள்ளுங்கள்' என்ற அறிவுரையை அவருக்கு செய்தது. ஏனென்றால், எழுத்தாளர்களுக்குப் பெரிய வருமானம் இல்லாத காலம் அது.

ஆனால், 1997-ம் ஆண்டு ரௌலிங்கின் நெட்வொர்த் பூஜ்யம். 2015-ல் அவருடைய நெட்வொர்த் ஒரு பில்லியன் டாலர்களாக இருந்தது. ஹாரி பாட்டர் பிராண்டின் மதிப்பு 15 பில்லியன் டாலர்களாக இருந்தது. ஹாரர் ஸ்டோரி எழுத்தாளரான ஸ்டீபன் கிங் அந்தப் பிரிவின் இராஜாவாக இருந்தார். அவருடைய புத்தகங்கள் எல்லாவற்றையும் சேர்த்து அவருடைய மதிப்பு 400 மில்லியன் டாலராகவே இருந்தது.

> "ஓர் இலக்கை நிர்ணயம் செய்யுங்கள். எப்படி அதை அடைவது என்று சிந்தியுங்கள். வெற்றி பெறுவதற்கான திட்டங்களைத் தீட்டுங்கள். அவற்றையெல்லாம் ரிஸ்க் என்கிறீர்களா? எதிர்பாருங்கள், எதிர் கொள்ளுங்கள்."

இவர் மட்டுமல்ல, அகதா கிறிஸ்டி அவருடைய முதல் புத்தகம் அச்சாகி வெளியே வருவதற்கு ஐந்து ஆண்டு காலம் போராட வேண்டி இருந்தது. இவற்றையெல்லாம் தாண்டித் தாங்கும் சக்தியின் இராஜாவாக இருந்தவர் லூயிஸ் எல் அமார். இருநூறு முறை நிராகரிக்கப்பட்ட இவர் பின்னாளில் மிகப் பெரிய கதாசிரியராக உருவெடுத்தார்.

எனவே, வெற்றி பெற எது தேவை என்று குறித்துப் பேசப்படும் பல விஷயங்கள் தவறானவையே. வெற்றி பெற்ற நபர்கள் அனைவருமே ஆரம்பத்திலேயே மிகப் பெரிய ஆள்கள் இல்லை. உங்களையும் என்னையும் போல் சமூகம், உடல் நிலை, அந்தஸ்து எனப் பல்வேறு பிரச்சினைகளை யும் சந்தித்து முன்னேறியவர்களே. டாவின்சி, ஜார்ஜ் சோரோஸ் எனப் பலர் பற்றிப் படித்துப் பாருங்கள். உங்களுக்கு உண்மை புரியும்.

இவர்கள் அனைவருமே அசௌகர்யமான விஷயங்களைத் தொடர்ந்து முயற்சி செய்து நடத்தி வெற்றி பெற்றவர்களே. பணம் இருக் கிறது அல்லது இல்லை பவர் இருக்கிறது அல்லது இல்லை என்பதெல்லாம் ஒரு பொருட்டே இல்லை. எது இருந்தாலும் இல்லா விட்டாலும் தொடர் முயற்சி இருந்தால் வெற்றி என்பது நிச்சயம் கிடைக்கவே செய்யும்.

ஓர் இலக்கை நிர்ணயம் செய்யுங்கள். எப்படி அதை அடைவது என்று சிந்தியுங்கள். வெற்றி பெறுவதற்கான திட்டங்களைத் தீட்டுங்கள். அவற்றையெல்லாம் ரிஸ்க் என்கிறீர்களா? எதிர்பாருங்கள், எதிர் கொள்ளுங்கள். நடக்கும் ஒவ்வொரு எதிர்பாராத விஷயத்திலும் எதிர்கொள்ளும் ஒவ்வொருவகை ரிஸ்க்கிலும் எதைக் கற்றுக் கொண்டீர்கள் என்று பாருங்கள்.

நாம் விரும்பும் பாதையில் இலக்கை நோக்கி செல்கிறோமா? என்பதை அவ்வப்போது சரி பார்த்துக்கொள்ளுங்கள். உங்கள் மனம், உடல் போன்றவற்றை வளப்படுத்திக் கொள்ளுங்கள்" என்று சொல்லும் ஆசிரியர், அதற்கான வழிமுறைகளை தெள்ளத் தெளிவாக இந்தப் புத்தகத்தில் விளக்கிக் கூறியுள்ளார்.

வெற்றி என்பது ஒரு சிலருக்கு மட்டுமே உரித்தானது இல்லை. சரியான முயற்சி அனைவரையும் வெற்றி பெறச் செய்யும் என்று சொல்லும் இந்தப் புத்தகத்தை அனைவரும் ஒருமுறை படித்துப் பயன் பெறலாம்.



ஆனந்தன்
பிரேம்நாந்
லக்சி பண்ணை

# தென்னை சிவப்பு கூண்வண்டு தாக்குதல்

மரத்தில் பல ஓட்டைகளும், ஓட்டைகள் வழியே திசுக்களைத் தின்றபின் வெளியே தள்ளப்பட்ட மரநாறுகளும் காணப்படும்.

புழுக்கள் உட்சென்ற சிறிய துவாரத்தின் வழியே சிவப்பு நீர் வடிந்து காய்ந்த பிசின் காணப்படும்,

வெள்ளைப் புழுவானது இளந்தண்டு பகுதியைத் துளைத்து உள்ளே சென்று, இளந்தண்டின் சோற்றுப் பகுதியைத் தின்று வேகமாக வளர்கின்றது.

ஆகவே மரத்தின் பல இடங்களிலும் துவாரங்களாகக் காணப்படுகின்றன.

பலமற்ற இந்த நிலையில் மரம் எளிதாக முறிந்து விழுவது இயல்பு.

மரத்தின் அருகில் சென்று மரத்தில் காதை வைத்துத் தண்டுப்பகுதியில் கூர்ந்து கவனித்தால், புழுக்களின் இரையும் சப்தம் கேட்கும்.

தாக்குதல் அதிகரிக்கும் நிலையில் மரத்தின் உட்புற ஓலைகள் மஞ்சள் நிறமாக மாறும்.

அத்துடன் குருத்து முறிந்து விடுவதால் மரமானது பட்டுவிடும்.

அடையாளம் காண்பது எப்படி?

முட்டை நீள்வட்ட வடிவத்தில் வெள்ளை நிறத்தில் காணப்படும். துளைக்கப்பட்ட துவாரங்கள், காயம்பட்ட மற்றும் தண்டில் தாக்கப்பட்ட இடுக்குகளில் முட்டைகள் நிச்சயமாக இருக்கும்.

புழு இலேசான மஞ்சள் நிறத்துடன் காணப்படும். இப்புழுக்களுக்குக் கால்கள் கிடையாது. குட்டையான, சதைப்பற்றுடன், நடுவில் தடித்தும் ஓரங்களில் சற்று சிறியதாகவும் காணப்படும்.

கூட்டுப்புழுக்கள் தண்டின் உடல் பகுதியில் கூட்டை அமைக்கின்றன. உட்பகுதியைத் தின்று கழித்த நார் மற்றும் சக்கைப் பகுதியை இணைத்து நீண்ட உருண்டை வடிவக் கூட்டை இப்புழுக்கள் அமைக்கின்றன.

வளர்ச்சியடைந்த வண்டு சிவப்புக் கலந்த பழுப்பு நிறத்தில், முதுகுப் பகுதியில் 6-7 புள்ளிகளுடன் காணப்படும்.

ஆண் வண்டுகள் நீண்ட துதிக்கை போன்ற மூக்குடன், வாய்ப்பாகத்தில் அடர்ந்த உரோமாங்களுடன் காணப்படும்.

எண்ணிக்கையில் ஆண் வண்டு குறைவாகவும். பெண் வண்டுகள் அதிக அளவில் எவ்வாறு கட்டுப்படுத்துவது?

அருகில் இருக்கும் மரங்கள் பாதிக்கப்படாமல் இருக்க, வண்டு தாக்கிய மரங்களை வெட்டி தீ இட்டு அழிக்க வேண்டும்.

எந்தச் சந்தர்ப்பத்திலும் தென்னை மட்டைகளை வெட்டக்கூடாது அதிலும் குறிப்பாகப் பச்சை மட்டைகளை வெட்டக் கூடாது.

தென்னை மட்டை, ஓலைகள் முழுவதும் வெட்டுவதால் வண்டுகள் முட்டையிட எளிதாகிறது.



அதாவது தென்னை மரங்களில் தென்னை மட்டைகளை வெட்டும் போது வெட்டப்பட்ட இடத்திலிருந்து சிறிய அளவில் திரவம் போன்ற ஒன்று வடியும். இத்திரவம் வண்டுகளுக்கு மிகவும் பிடித்ததாக இருப்பதனால் அவ்விடத்திற்கு வண்டுகள் கவர்ந்து இழுக்கப்படும்.



**“ தென்னை மட்டை, ஓலைகள் முழுவதும் வெட்டுவதால் வண்டுகள் முட்டையிட எளிதாகிறது. அதாவது தென்னை மரங்களில் தென்னை மட்டைகளை வெட்டும் போது வெட்டப்பட்ட இடத்திலிருந்து சிறிய அளவில் திரவம் போன்ற ஒன்று வடியும். இத்திரவம் வண்டுகளுக்கு மிகவும் பிடித்ததாக இருப்பதனால் அவ்விடத்திற்கு வண்டுகள் கவர்ந்து இழுக்கப்படும். ஆகையால் இதை தடுக்க முடிந்தவரை மட்டைகள் தானாக பழுத்து விழும்வரை நாங்கள் எதுவும் செய்யக்கூடாது. ”**

ஆகையால் இதைத் தடுக்க முடிந்த வரை மட்டைகள் தானாகப் பழுத்து விழும் வரை நாங்கள் எதுவும் செய்யக்கூடாது.

ஒரு சில பண்ணைகளில் கட்டாயத் தேவை ஏற்படின் தென்னை மட்டையின் அடிப்பகுதியில் இருந்து 4 அடி விட்டு ஓலைகளை நறுக்கி அவ்விடத்தில் சுண்ணாம்பு தடவி விடுவார்கள்.

இதில் புழுக்கள் எளிதில் துளைவிட்டு உட்செல்வது தடுக்கப்படுகின்றது.

சிறிய பத்து வருடத்திற்கு உட்பட்ட தென்னை மரங்களைச் சுற்றி இயற்கை உரம் இடுவதாக இருந்தால். முடிந்தவரை மாட்டு எரு இடுவதைத் தவிர்க்க வேண்டும்.

காரணம் மாட்டெருவில் அதிகளவான வண்டுகள் உற்பத்தியாக வாய்ப்பு உள்ளது. எதிர்காலத்தில் இதில் உற்பத்தியாகும் வண்டுகள் தென்னை மரத்தினைத் தாக்க வாய்ப்பு உள்ளது. நன்றாக வளர்ந்த 10 வருடத்திற்கு மேற்பட்ட மரங்களுக்கு மாட்டு எருவினைப் பயன்படுத்தலாம்.

ஒவ்வொரு தென்னை மரத்தைச் சுற்றிக் கற்றாழை கன்றுகள் நாட்டினால் அம் மரத்தில் வண்டுத்தாக்குதல் இருக்காது. அதோடு கற்றாழை இதர வருமானம் தரக்கூடிய ஊடுபயிராக இருக்கும். அத்தோடு தென்னை மரத்தினைச் சுற்றி எப்போதும் ஈரப்பதத்தினைத் தக்க வைத்துக்கொள்ளும்.

ஐந்து வயதுக்கு உட்பட்ட சிறிய தென்னை மரங்களாக இருந்தால் அத்தென்ன மரத்தின் பாத்தியினுள் நான்கு அல்லது ஐந்து சாமந்தி பூச்செடிகளைச் சுற்றி நடுவதன் மூலம் அவ்விடத்திற்கு வண்டுகள் வருவதை முற்றாகத் தடுக்கலாம்.

பெரிய அளவில் தென்னந்தோட்டம் செய்யும் நண்பர்கள் முடிந்தால் கழுதை ஒன்று வாங்கி விடுங்கள். கழுதை நடமாட்டம் இருக்கும் தோட்டங்களில் இருக்கும் தென்னை மரத்தினை வண்டுகள் தாக்குவது குறைவு.

கடல் மணல் 1 கிலோ. பொடியாக்கிய வேப்பங்கொட்டை 1 கிலோ. பெருங்காயம் 20 கிராம். வேப்பெண்ணெய் 50 மில்லி இவை அனைத்தையும் கலந்து. கை அளவு எடுத்து மட்டை இடுக்குகளில் 3 மாதத்திற்கு ஒருமுறை தூவி விடவேண்டும்.

காண்டாமிருக வண்டு தாக்கிய மரத்தின் ஓட்டைகளில் இந்தக் கலவையை கொண்டு அடைத்து விடுவதால் வண்டுகள் இறந்து விடும். சிவப்பு கூண் வண்டும் முட்டை இடுவது தவிர்க்கப்படும்.

தென்னை ஓலை பொறி

கரும்புச்சாறு 1 கி.கி + ஈஸ்ட் 2 கிலோ + 1/2 கிலோ அன்னாசி சாறு + சிறு துண்டுகளாக வெட்டப்பட்ட ஓலை மட்டைத் துண்டுகள். நீர் 1L இவை அனைத்தையும் பானை ஒன்றுக்குள் இட்டுக் கலக்கி



தென்னந் தோப்பில் வைத்துக் கூண் வண்டுகளைக் கவரச் செய்து அழிக்கலாம். இக் கரைசலை ஓர் ஏக்கருக்கு பயன்படுத்தலாம்.

அத்தோடு 250 கிராம் ஆமணக்கு விதை அல்லது ஆமணக்கு புண்ணாக்கு 250 கிராம் எடுத்து நன்கு பொடியாக அரைத்து எடுத்து அதனோடு ஒரு லிட்டர் தண்ணீரை நன்கு கலந்து ஒரு மண் பானையில் அல்லது ஏதாவது ஒரு குடுவையில் கலந்து விட்டு அந்தக் குடுவையில் வாய்ப்பகுதி மேலே தெரியும்படி மீதமுள்ள அனைத் தையும் மண்ணுக்குள் புதைத்து விட வேண்டும்

இவ்வாறு செய்வதனால் நாளும் தோட்டத் திலுள்ள பெரிய சிறிய நடுத்தர அனைத்து வண்டுகளும் இதனுள் விழுந்து விடும் பிறகு இந்த வண்டுகளை எடுத்து அப்புறப்படுத்திவிட வேண்டும்.

தென்னை நடுகை செய்த விவசாயிகள் இரசாயன முறையில் கட்டுப்படுத்த நினைத்தால் அதிக அளவில் செலவு ஏற்படும். அத்தோடு பூரண தீர்வு கிடைக்காது.

மேலதிக ஆலோசனை தேவை எனில் தொலைபேசி ஊடாக எம்மோடு தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி - 0770239784

தமிழர் பொருணமியம்
வாரமலர் TAMILS ECONOMY



ஞாயிற்றுக்கிழமை
30.07.2023

# விலங்குகளின் இரத்த மாதிரிகளை எங்கு பரிசோதிப்பது?





Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்
[BVSc,MVSc]
கால்நடை வைத்தியர், செட்டிகுளம்

சில நாட்களுக்கு முன் எனது செட்டிகுள அலுவலகத்திலிருந்து சிறுநீரகப் பாதிப்பு இருப்பதாகச் சந்தேகிக்கத்தக்க நாயின் இரத்த மாதிரியை 30 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள வவுனியாவின் ஆய்வுகூடமொன்றுக்கு உரிமையாளரிடம் கொடுத்து அனுப்ப விலங்குகளின் இரத்த மாதிரிகளை எடுக்க கூடாது என மாகாண சுகாதார அதிகாரிகள் கூறியுள்ளனர் என அவர் அலைக்கழிக்கப்பட்டுள்ளார். அதாவது மனிதர்களுடையதும் விலங்குகளினதும் இரத்த மாதிரிகளை ஒரே ஆய்வு கூடத்தில் செய்ய முடியாதாம். இறுதியில் வவுனியாவிலிருந்து 52 கிலோ மீட்டரிலுள்ள அனுராதபுரத்திற்குச் சென்று அங்குள்ள மனித ஆய்வுகூடத்தில் அந்த இரத்த மாதிரிகளைப் பரிசோதித்து வந்தனர். அங்கு இப்படி ஒரு தடையும் இல்லை.

இது ஒரு தவறானதும் விஞ்ஞான பூர்வமற்றதுமான முடிவாகும். இலங்கையில் பெரும்பாலான விலங்குச் சிகிச்சை நிலையங்களின் இரத்த மாதிரிகளை மனித ஆய்வு கூடங்கள்தான் செய்கின்றன. மிகக் குறைந்தளவான அதுவும் மிகப்பெரிய கால்நடை வைத்தியசாலைகள் தான் இரத்த மாதிரிகளைப் பரிசோதிக்கும் வசதிகளைக் கொண்டுள்ளன. மற்றபடி மனித ஆய்வுகூடங்கள் தான்.

வவுனியாவில் சில மாதங்களுக்கு முன் ஒரு மனித இரத்த ஆய்வு கூடத்தில் நாய் ஒன்றின் இரத்த மாதிரியைப் பரிசோதித்ததாக அதுவும் மிகப்பெரும் மருத்துவத் தவறை அவர்கள் செய்தது போன்று பல ஊடகங்கள் செய்தியிட்டிருந்தன. தற்போது வடமாகாணச் சுகாதாரப் பணிப்பாளர் வெளியிட்ட கடிதம் தற்போது ஊடகங்களில் வெளிவந்துள்ளது. அந்த ஆய்வுகூட உரிமையாளர் இந்தத் தவறை இனிச் செய்ய மாட்டேன் என உறுதியளித்ததாக. இந்த மாதிரியான விடயங்கள் வடக்கு மாகாணத்தில்தான் இடம்பெறுகின்றன.

நாய்களின் இரத்தத்தை எதற்காகப் பரிசோதிக்க வேண்டும் எனப் பார்த்தால், மனிதர்களைப் போல பல நோய்களைக் கண்டறிய இரத்தப் பரிசோதனை கட்டாயம். முன்பெல்லாம் கால்நடைகளுக்குச் சில அனுமானங்களின் அடிப்படையில் தான் சிகிச்சைகளைச் செய்தார்கள். தற்போது இந்த மாதிரியான நவீன பரிசோதனைகளின் துணையுடன் பல நோய்களை இலகுவாக கண்டறிந்து சிகிச்சையளிக்க முடிவதால் பல கால்நடைகள் தப்பிப் பிழைக்கின்றன. வெளிநாடுகளில் பல சிகிச்சை நிலையங்களிலேயே இரத்தப் பரிசோதனை, x-ray, scaning வசதிகள் இருக்கின்றன.

எனினும் இலங்கை போன்ற நாடுகளில் நான் முன்பு கூறியது போல சில சிகிச்சை நிலையங்களிலேயே இந்த வசதிகள் இருக்கின்றன. மனித ஆய்வு கூடங்கள் இப்படிப் புறக்கணித்தால் மிக்க குறைந்தளவில் உள்ள கால்நடை ஆய்வுகூடங்களில் அதிக செலவில்தான் பரிசோதனைகளை செய்ய வேண்டும். எனக்குத் தெரிந்து வடக்கு கிழக்கில் எங்குமே இந்தமாதிரி விலங்கு மாதிரிகளைச் சோதிக்கும் கால்நடை ஆய்வு கூடங்கள் இல்லை.

இனி இந்த மனித ஆய்வு கூடப் பிரச்சினைக்கு வருவோம்.இலங்கையின் மிகப் பெரிய மருத்துவ ஆய்வகங்கள் ஆயிரக்கணக்கில் விலங்குகளின் இரத்த மாதிரிகளைப் பல்வேறு தேவைகளுக்காகப் பரிசோதிக்கின்றன. இதில் இரத்தத்திலுள்ள அணுக்கள், யூரியா, கிரியட்டினைன்





போன்ற உயிர் இரசாயனங்களை, ஓமோன்களைப் பரிசோதிப்பார்கள். அவை மனிதனுக்கும் விலங்குகளுக்கும் பெரும் பாலும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். எனினும் காணப்படும் அளவில் வேறுபாடு இருக்கும். அந்த அளவீடுகளை கால்நடை வைத்தியர்கள் அறிந்திருப்பதால் நோய் நிலைகளை இலகுவாக அறிய முடியும். மற்றபடி பாரிய சிக்கல்கள் கிடையாது. இதைப்பற்றி ஆய்வுகூடமோ சுகாதார அதி காரிகளோ கவலைப்படத் தேவையில்லை. இது கால்நடை வைத்தியர்களின் வேலை.

மேற்படி பிரச்சினை தொடங்கக் காரண மான விடயத்தைப் பார்த்தால், வவுனியா வில் ஓர் ஆய்வு கூடம் நாய் ஒன்றின் இரத்தத்தைச் சோதித்ததாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. இறுதியில் மாகாணப் பணிப்பாளர் அந்த ஆய்வக உரிமையா ளர் தவறை ஏற்றுக் கொண்டதாக அறிக்கை வெளியிட்டிருந்தார். எனக்குப் புரியவில்லை இங்கு எங்கு தவறு உள்ளது என்று. நான் அறிந்த வரையில் இலங்கையில் விலங்கு இரத்தத்தை மனித இரத்தத்தை சோதிக் கும் ஆய்வகங்களில் சோதிக்க முடியாது எனும் ஆவணங்கள் கிடையாது என நினைக்கிறேன். MRI (மருத்துவ ஆராய்ச்சி நிலையம்) போன்ற இடங்களில் விலங் குகளின் மாதிரிகள் பரிசோதிக்கப்படுகின் றன என்பதையும் கருத்திற் கொள்க.

ஒரு விடயத்தைக் கூறுகிறேன். மனிதர் களின் இரத்தத்தைச் சோதிக்கும்போது நோயாளிகள், சுகதேகிகள் என சகலரின் இரத்தமும் அதே இயந்திரங்களில் வைத் துத்தான் சோதிக்கப்படுகிறது. சில வேளை HIV உள்ளவரின் இரத்தமும் அதே இயந் திரத்தில் வைக்கப்படும். இங்கு சோதிக்கப் படும் இரத்தம் மீள யாருக்கும் செலுத்தப்படு வதில்லையே. அது போலத்தான் விலங் கின் இரத்தத்தைப் பரிசோதிப்பதால் அங்கு வரும் மனிதர்களுக்கு எப்படிப் பாதிப்பு வரும்?

ஆய்வு கூடங்களில் ஒவ்வொரு மாதிரி களைச் சோதித்த பின்னும் முறையான தொற்று நீக்கம் செய்யப்பட்டே அடுத்த மாதிரி எடுக்கப்படும். எனவே இது ஒரு வீண் அச்சம். மேலும், யாரும் விலங்கு களை நேரே கொண்டு சென்று மனித ஆய்வு கூடங்களில் மனிதர்களுக்கு எடுப்பது போல இரத்தம் எடுப்பதில்லை. எங்காவது கால்நடை வைத்தியர்கள் மாதிரியை எடுத்து அதனை ஆய்வு கூடத்துக்கு அனுப் புவதே நிகழ்கிறது.

இந்தத் திடீர் பதற்றம் தேவையற்றது. இதனால் அப்பாவி வாயில்லா ஜீவன்கள் தான் முறையான, விரைவான சிகிச்சை கிடைக்காமல் இறக்கும் நிலை தோன்று கிறது. மேலும் "one health" எனும் மனித விலங்கு தொடர்பான நவீன சுகாதார எண்ணக்கரு பற்றி மேற்படி கடிதங்களை யும் கருத்துக்களையும் வெளியிடும் மகா பெரிய சுகாதார அதிகாரிகளுக்கும் ஊட கங்களுக்கும் தெரியாது போல..?

“ஆய்வு கூடங்களில் ஒவ்வொரு மாதிரிகளை சோதித்த பின்னும் முறையான தொற்று நீக்கம் செய்யப்பட்டே அடுத்த மாதிரி எடுக்கப்படும். எனவே இது ஒரு வீண் அச்சம். மேலும், யாரும் விலங்குகளை நேரே கொண்டு சென்று மனித ஆய்வு கூடங்களில் மனிதர்களுக்கு எடுப்பது போல இரத்தம் எடுப்பதில்லை. எங்காவது கால்நடை வைத்தியர்கள் மாதிரியை எடுத்து அதனை ஆய்வு கூடத்துக்கு அனுப்புவதே நிகழ்கிறது.”



# மெல்லெனப் பாயும்



வேதநாயகம் தபேந்திரன்



> இன்று பல இலட்சங்கள் முதலீடு இட்டால் நாளை ஓரிரு இலட்சங்கள் வருவாயாகக் கிடைக்க வேண்டும். அல்லது பல ஆயிரம் வருவாயாகக் கிடைக்க வேண்டுமென்ற எதிர்பார்ப்பு பரவலாகப் பலரிடம் உள்ளது. சிறிய தொகை வருமானத்தை மதித்துச் செய்யும் தொழிலே தெய்வம் என எம்மை அர்ப்பணித்தால் தான் முன்னேறலாம் என்ற உளப்பாங்கு பலரிடம் இல்லை. இதனால் தான் நல்ல வேலைகள் இருந்தும் வேலையில்லாதோர் தொகை அதிகமாக இருக்கிறது எனலாம்.

"உந்த எண்ணூறு ரூபா நாள்க் காசுக்காக என்னால ஒரு நாள் முழுதும் ஊம்ப ஏலாது " உயர்தரம் படித்த அந்த மாணவன் தனது பெற்றோருக்கு இவ்வாறு சொன்னான்.

"தம்பி எமது அயலில் உள்ள உன்ர வயது அந்தப் பொம்பிளைப் பிள்ளையைப் பார். அது ஏ.எல் எடுத்துப் போட்டுத் தன்ர குடும்பக் கஸ்ரம் தெரிஞ்சு பாங்கில (வங்கி) வேலைக்குப் போய்த் தாற காசை வீட்டில குடுத்துப் பஞ்சம் பாக்குது. சின்னனில இருந்து தான் பெருசாய் வாறது தம்பி. உழைப்பை மதி தம்பி" எனத் தாயார் கெஞ்சினார்.

அந்த இளைஞனோ விடாப் பிடியாக மாட்டேன் என நின்றான். கதைத்துப் பிரயோசனம் இல்லையெனத் தாயும் தந்தையும் விட்டு விட்டனர்.

தனது குடும்ப வறுமை உணர்ந்த அந்த பொம்பிளைப் பிள்ளை காலை 8.00 மணிக்குத் தனது ஊரின் சந்தியில் உள்ள வங்கியில் ஆறு மாத கால ஒப்பந்த அடிப்படையிலான வேலைக்குச் சென்றாள். வங்கிக்கு வரும் பொது மக்களுக்குப் படிவங்கள் நிரப்ப உதவுதல். வழிகாட்டல் தகவல்களைச் சொல்லுதல். அலுவலக உத்தியோகத்தர்களது வேலைகளுக்கு உதவுதல் ஆகியவை தான் வேலை.

அவ் வேலைக்கு நாள் சம்பளம் 800 ரூபா. மாதம் முடியப் 16,000 ரூபாவை எடுத்துத் தாயிடம் கொடுத்து ஏனைய இரு சகோதரர்களின் படிப்புக்கு உதவினாள்.

அவள் அந்தத் தனியார் வங்கியில் வேலை செய்தது, ஆர்வமாக ஓடியோடி எல்லா வேலையையும் பழகியது, வாடிக்கையாளர்களுக்குத் தானாக வலிந்து முன் வந்து உதவியது, அங்கு பணியாற்றிய ஊழியர்களை மதித்துப் பழகியது ஆகியவற்றைக் கிளை முகாமையாளர் கணித்து வைத்திருந்தார்.

அந்தப் பெண் பிள்ளை தனது ஆறு மாதகாலப் பணியை நிறைவு செய்தார்.

குறித்த வங்கியில் ஏற்பட்ட பதவி வெற்றிடங்களுக்கு தலைமை அலுவலகத்தால் விண்ணப்பங்கள் கோரப்பட்டது. ஆறு மாதகால ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய அந்தப் பெண் பிள்ளையும் விண்ணப்பித்தார். இவரைப் போல 800 ரூபா நாள் சம்பளத்தில் 06 மாத காலப் பணியை நிறைவு செய்த ஏனையோரும் விண்ணப்பித்தார்கள்.

தலைமை அலுவலகத்தில் தேவையான திறன்களை அளவிடுவதற்கான முறைசார் பரீட்சை ஒன்றை வைத்தார்கள்.

அதில் தேறியோரை அவர்கள் ஏற்கனவே பணியாற்றிய வங்கி முகாமையாளர்களிடம் குணநடை பண்புகளைத் தலைமை அலுவலகம் பெற்றுக் கொண்டது.

சிறந்த சிபாரிசு உடையோரை அந்த வங்கி நிரந்தரப் பணியாளர்களாக நியமித்துக் கொண்டது.

எமது நாட்டில் தனியார் வங்கிகள், நிதி நிறுவனங்கள் ஆகியவை தற்போது இவ்வாறானதொரு முறை மூலமாகப் பணிக்குத் தெரிவு செய்கின்றன.

உண்மையில் இது மிகவும் நல்லதொரு முறை. மிகச் சிறந்த பணியாளர்களைத் தனியார் நிறுவனங்கள் பெற்று உயர்ந்த இலாபத்தை அடைகின்றன.

நாளாந்தச் சம்பளம் 800 ரூபாவை மதித்துச் சென்று அர்ப்பணிப்பாகப் பணியாற்றிய அந்த பெண் பிள்ளை இன்று உயர்ந்த நிலையை அடைந்துள்ளார்.

அந்தத் தொகையை மதிக்காத இளைஞனுக்கு உயர்வு கிடைக்கவில்லை.

எமது பொருளாதார உயர்வு தொடர்பான பிரதான தடைக்கல் இது தான். எடுத்த எடுப்பில் பெரிய தொகைக் காசு கிடைக்க வேண்டும்.

இன்று பல இலட்சங்கள் முதலீடு இட்டால் நாளை ஓரிரு இலட்சங்கள் வருவாயாகக் கிடைக்க வேண்டும். அல்லது பல ஆயிரம் வருவாயாகக் கிடைக்க வேண்டுமென்ற எதிர்பார்ப்பு பரவலாகப் பலரிடம் உள்ளது.

சிறிய தொகை வருமானத்தை மதித்துச் செய்யும் தொழிலே தெய்வம் என எம்மை அர்ப்பணித்தால் தான் முன்னேறலாம் என்ற உளப்பாங்கு பலரிடம் இல்லை. இதனால் தான் நல்ல வேலைகள் இருந்தும் வேலையில்லாதோர் தொகை அதிகமாக இருக்கிறது எனலாம்.

மெல்ல மெல்ல உழைத்து முன்னேறினால் தான் பெரியதொரு தொகை வருமானத்தைப் பெறலாமென்ற பொறுமை உச்ச நிலை வறுமையில் உள்ளது.

இதனைத் தான் எமது முன்னோர் " மெல்லெனப் பாயும் தண்ணீர் கல்லும் உருகப் பாயும் " என்றார்கள்.



(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

25. சில வழிகாட்டுதல்களுக்கு உட்பட்டு பணியிட விதிகளை (Workplace rules) முதலாளிக்கு அறிமுகப்படுத்தி அந்த பணியிட விதிகளுக்குச் சட்ட பூர்வ அதிகாரம் வழங்குதல்.

26. மோசமான செயற்திறன், மறுசீரமைப்பு அல்லது வணிக மறுசீரமைப்பு ஆகியவற்றின் காரணமாக வேலைகள் தேவையற்றதாக இருக்கும்போது இழப்பீட்டுடன் பணிநீக்கம் செய்வதற்கான செயன்முறையை விரைவாகவும் எளிதாகவும் செய்தல்.

27. மூலப்பொருட்கள் கிடைக்காதது, ஆர்டர்கள் கிடைக்காதது, இயந்திரங்கள் பழுதடைதல் அல்லது முதலாளியின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களுக்காகக் குறுகிய காலத்திற்குப் பணிநீக்கம் செய்யத் தொழிலாளர் ஆணையர் ஜெனரலின் அனுமதியைப் பெறுதல்.

28. ஒரு பணியாளர் தானாக முன்வந்து இராஜினாமாச் செய்தால் ஒரு மாதத்திற்கு முன்னதாகவே முதலாளியிடம் தெரிவித்து இராஜினாமா செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.

29. ஓய்வூதிய வயதின் திருத்தம்.

30. வேலை அல்லது தொழிலில் ஈடுபடும்போது பின்பற்ற வேண்டிய உழைப்பின் கண்ணியத்திற்கான தர நிலைகள் மற்றும் நெறிமுறைகளை அறிமுகப்படுத்துதல்.

31. சமூகப் பாதுகாப்புக் காப்பீட்டு நிதியத்தின் மூலம் மகப்பேற்று நலன்கள், தொழிலாளர்களின் உடல்நலம் மற்றும் வேலையின்மை ஏற்பட்டால் இழப்பீடு வழங்கும் சமூகப் பாதுகாப்பு அமைப்பை நிறுவுதல்.

32. வேலையின் செயற்றிறனைக் கண்டறியச் சட்ட ஏற்பாடுகளைச் செய்தல்.

33. மனித சக்தி வழங்கல் நிறுவனங்கள் (Man Power Supply institutes) மற்றும் வேலைவாய்ப்பு ஏஜென்சிஸ் (Employment Agencies) முறைப்படுத்துதல் தொடர்பான சட்ட ஏற்பாடுகளைச் செய்தல்.

34. மின் ஊதியங்கள் (E-Wages) அமைப்புத் தொடர்பான சட்ட விதிகளை அறிமுகப்படுத்துதல்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற் றும் தொழிலாளர் அமைச்சகம், உத்தேச வேலைவாய்ப்புச் சட்டம், தொழிலாளர் அமைப்புகள், முதலாளிகள் சங்கங்கள் மற்றும் சட்ட வல்லுநர்கள் உள்ளிட்ட தொடர்புடைய பங்குதாரர்களுடன் விரிவான ஆலோசனையின் விளைவே மேற்கூறிய 34 முக்கிய அம்சங்கள். புதிய சட்டக் கட்டமைப்பிற்கு ஏற்றவாறு வணிகங்களுக்கு மாறுதல் காலத்தை அனுமதிப்பதன் மூலம் ஒரு சுமுகமான நடைமுறைச் செயன் முறையை உறுதி செய்ய அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

முன்மொழியப்பட்ட வேலைவாய்ப்புச் சட்டத்தின் கீழ் உள்ள ஒருங்கிணைந்த தொழிலாளர் சட்ட அமைப்பு, அதிகரித்த உற்பத்தித்திறன், மேம்பட்ட தொழிலாளர்-முதலாளி உறவுகள் மற்றும் மிகவும் கவர்ச்சிகரமான முதலீட்டுச் சூழல் போன்ற பல நன்மைகளைக் கொண்டுவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தொழிலாளர்கள் மேம்பட்ட பாதுகாப்பு, சிறந்த பணி நிலைமைகள் மற்றும் மேம்பட்ட சமூகப் பாதுகாப்பு பயன்களை அனுபவிப்பார்கள். இது ஊழியர்களின் வாழ்க்கைத் தரத்தில் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். உத்தேச வேலைவாய்ப்புச் சட்டத்தின் ஒரு பகுதியாக இலங்கையில் தொழிலாளர் உரிமைகள், பணியிடப் பாதுகாப்பு மற்றும் நியாயமான வேலைவாய்ப்பு நடைமுறைகளை மேம்படுத்துவதை இந்த முக்கிய அம்சங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளன.

நிறைவாக, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் தொழிலாளர் அமைச்சினால் முன்மொழியப்பட்ட வேலைவாய்ப்புச் சட்டத்தின் 34 முக்கிய விடயங்கள் வெளியிடப்பட்டமை, மிகவும் ஒத்திசைவான மற்றும்பயனுள்ள தொழிலாளர் சட்ட அமைப்பை உருவாக்குவதற்கான இலங்கையின் முயற்சிகளில் குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கிறது. சட்டம் இயற்றப்பட்டவுடன் தொழிலாளர்களை உயர்த்தவும் சமமான வளர்ச்சியை ஊக்குவிக்கவும் மேலும், நிலையான மற்றும் உள்ளடக்கிய பொருளாதாரத்திற்கு வழி வகுக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது.

எவ்வாறாயினும், அதன் வெற்றியானது, அரசாங் கம், முதலாளிகள், தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர் சந்தையில் உள்ள பிற பங்குதாரர்களுக்கு இடையிலான நெருக்கமான ஒத்துழைப்பை நம்பியிருக்கும்.

+94-777-802-900
Email: swaminathan@agsarma.com

தமிழர் பொருளியல்
வாரமலர் TAMILS ECONOMY



ஞாயிற்றுக்கிழமை
30.07.2023



# எங்கட ஆச்சி

எனக்கு நல்ல ஞாபகம் இருக்கு முந்திச் சின்னவயசில பள்ளிக்கத்துக்குப் போகாம வீட்டில நிக்க ஆச்சி என்னை ஒருநாளும் விடமாட்டா. தறதறவெண்டு குழறக் குழற இழுத்துக்கொண்டுபோய் பள்ளிக்கத்தில விட்டுப்போட்டுத்தான் மற்ற வேலை பாப்பா. ஆரும் வாத்திமார் ஏனணை ஆச்சி பெடியை உந்தக் கொற இழுவை இழுத்துக்கொண்டு வாறாயணை எண்டால், அட மோனை பள்ளிக்கம் எண்டிறது தனிய பாடம் படிக்கிற இடம் மட்டும் இல்லை பழக்கவழக்கம் பண்பாட்டையும் படிக்கிற பழகிற இடமெல்லே. இவன் வீட்டில நிக்காம பள்ளிக்கத்தில ஒரு ஆறு மணித்தியாலம் இருந்தாலே அவனுக்குப் போதும் வேற ஒண்டும் தேவையில்லை எண்டுவா.

அவ்வளவு நேரமும் அவன் இருந்தான் எண்டாலே வேற எங்கயும் வீணாத்திரிஞ்சு வீண் வேலை பாக்கமாட்டான் எண்டுவா. உண்மையில பள்ளிக்கம் எண்டிறது உயிர்களோட புழங்கிற இடம். ஒவ்பீசில எண்டால் பேப்பர்கட்டுகளோட மட்டுந்தான் புழங்குவினம். ஏதும் பக்ரறியள் எண்டால் மிசினோட மட்டும் புழங்குவினம். மிசின் பழுதானால் திருத்தலாம் பேப்பர் கிழிஞ்சா வேற பேப்பர் வாங்கலாம். ஆனால் பெடிபெட்டை பழுதானால் அதுகளின்ரை மனசு கிழிஞ்சு போச்சுது எண்டால் அவ்வளவுதான் பிறகு ஒண்டுஞ்செய்யேலாது எண்டுவா. அதால பெடிபெட்டைக்குப் பள்ளிக்கம் முக்கியம் எண்டு ஆச்சி சொல்லுவா.

பள்ளிக்கத்தில எடுக்கிற அனுபவத்தை பெடிபெட்டையள் வேற எங்கயும் எடுக்க மாட்டினம். அங்க கணக்கெண்டால் எப்பிடிச் செய்யிறது எண்டு செய்து காட்டுவினம். விஞ்ஞானம் எண்டால் பிறக்றிகல் செய்து காட்டுவினம். ஆங்கிலம் தமிழ் எண்டால் வாசிச்சு வாசிக்க விட்டு படிப்பிப்பினம். சங்கீதம் பாடிக்காட்டுவினம் டான்ஸ் ஆடிக்காட்டுவினம் சித்திரம் கீறிக்காட்டுவினம் . ஆனால் இப்ப ஒன்லைனில படிக்கிற பிள்ளையளுக்கு உந்த அனுபவம் இல்லாமல் போட்டுது எண்டுதான் சொல்ல வேணும். எல்லாத்தையும் படமாவே பாக்குதுகள். வேணுமெண்டால் சோதினை பாஸ் பண்ணலாம் சேர்ட்டிபிக்கற் எடுக்கலாம். உண்மையான அனுபவத்தை எடுக்கேலாது. வாழ்க்கைக்குத் தேவையானதைப் படிச்சு ஒரு முழுமனுசனா வாறதுக்கான ஒரு பயிற்சியைத்தருமோ எண்டால் இல்லையெண்டு தான் சொல்ல வேணும்.

உது எப்பிடி எண்டால் மழைக்கோற் போட்டுக்கொண்டு குளிக்கிறமாதிரி. குளிச்ச மாதிரி இருக்கும். ஆனால் உண்மையாகக் குளிக்கிறதால வாற அனுபவம் ஆருக்கும் கிடையாது.

உண்மையா ஒருத்தற்றை வாழ்க்கையில தான் படிச்சபள்ளிக்கத்தை ஆராலையும் மறக்கேலாது. ஆரும் ஊரை விட்டுப்போன ஒருத்தர் கன காலத்துக்குப்பிறகு ஊருக்குப் போனா அவருக்கு தன்ரை பள்ளிக்கத்தை தான் படிச்ச வகுப்பை தான் பாவிச்ச மேசை கதிரையள் எல்லாத்தையும் பாக்க வேணும்



- காரைக்கவி கந்தையா பத்மானந்தன் -

போல இருக்கும். தனக்குப் படிப்பிச்ச வாத்தியாரோட கதைக்க வேணும் போல இருக்கும். தன்ரை பிள்ளையளுக்கு இதுதான் நான் படிச்ச பள்ளிக்கம் இதுதான் என்ர வகுப்பு இஞ்சைதான் நாங்கள் உருண்டு பிரண்டு சண்டை பிடிச்சனாங்கள் எண்டு சொல்ல வேணும் போல இருக்கும். இவரிட்டைத்தான் நான் படிச்சனான் இவரில்லாட்டி நான் இண்டைக்கு இருக்கிற நிலமைக்கு வந்திருக்கேலாது எண்டு தான் படிச்ச வாத்தியாரைக் கண்டு கதைச்சு அறிமுகஞ்செய்ய வேணும் போல இருக்கும்.

இந்த விருப்பம் எங்களுக்கு வேற எங்கயும் வாறேல்லை. ஆசுப்பத்திரியில எப்பவும் ஏதும் வருத்தம் வாதை வந்து படுத்திருப்பம். டாக்குத்தர் நேர்ஸ்மாரெல்லாம் மருந்து தந்து சுகப்படுத்தி இருப்பினம். எண்டாலும் கனகாலத்துக்குப் பிறகு போனால் எங்களுக்கு அங்க ஆசுப்பத்திரியைப் போய்ப் பார்க்க வேணும் டாக்குத்தரை நேர்ஸைப் பாக்கவேணும் எண்டெல்லாம் நினைப்பு வராது. இவர்தான் எனக்கு அப்ப மருந்து தந்தவர் எண்டு டாக்குத்தரை பிள்ளையளுக்கு அறிமுகஞ் செய்ய வேணும் எண்டு நினைப்பு வராது. இல்லாட்டில் ஏதும் பிரச்சினை வந்து விதானை பொலிசு கோடெல்லாம்போயிருப்பம். அவை எங்களுக்கு உதவி செய்திருப்பினம். ஆனா எங்களுக்கு விதானையைப்போய்பாக்கவேணும்அவற்றை ஒவ்பீசைப்போய்ப் பாக்கவேணும் இல்லாட்டில் பொலிஸ் ஸ்ரேசனைப்பாக்க வேணும் கோட்டைப் போய்ப்பாக்க வேணும் எண்டு ஒரு நாளும் ஆசைப்படுறேல்லை.

ஆனால் பள்ளிக்கம் எண்டது அப்பிடியில்லை படிப்பிச்ச வாத்திமார் அப்பிடி எண்டில்லை. ஒரு மனுசனுக்கு தான் படிச்ச பள்ளிக்கத்தையும் தன்ரை வகுப்பறையையும் தனக்கு படிப்பிச்ச வாத்தியாரையும் சாகுமட்டும் மறக்கேலாது. ஏன் கனக்கப்போவான் உங்க ஊர் வழிய கனபேருக்கு மணிவிழா அறம்புறமா நடக்கும். அவை ஆரெண்டு பாத்தால் ஒண்டில் வாத்திமாரா இருக்கும் இல்லாட்டில் பிறின்சிப்பல்மாரா இருக்கும். அவையிட்டை படிச்ச பெடிபெட்டையள் எல்லாரும் சேர்ந்து உந்த சூரியனுக்கு நன்றி செய்யிறதுக்கு பொங்கிற மாதிரி தங்கட குருமாருக்கு நன்றி செய்யிறதுக்காக உந்த விழாக்களை எடுப்பினம்.உந்த மாதிரியான விழாக்களை மற்ற ஆக்களுக்கு எடுக்கிறதெண்டது வலு குறைவு.

வருத்தம் சுகமான வருத்தக்காறர் எல்லாரும் ஒருநாளுஞ் சேர்ந்து போய் உந்த டாக்குத்தராலதான் நாங்க சுகமா இருக்கிறம் எண்டு சொல்லி டாக்குத்தருக்கு மணிவிழா எடுக்க மாட்டினம். கொறனா ஊசி போட்ட எல்லாருஞ் சேர்ந்து போய் பிளச்சைக்கு இல்லாட்டில் எம்ஓ எச்சுக்கு விழா எடுக்க மாட்டினம். அதுமாதிரி காப்பற் றோட்டால போற எல்லாருஞ் சேர்ந்து உந்த என்ஜினியர் றோட்டுப்போட்டதால எல்லே அலுங்காமல் குலுங்காமல் போறம் வாறம் எண்டு பாராட்டி என்ஜினியருக்கு விழா எடுக்கமாட்டினம் .

உங்க உந்த ஜிஎஸ்மார், டிஎஸ்மார், ஜீஏமார் வரட்சி நிவாரணம், வெள்ள நிவாரணம், கொறனா நிவாரணம் அந்த நிவாரணம் இந்த நிவாரணம் எண்டு எத்தினையோ நிவாரணங்களை ஆக்களுக்குக் குடுத்திருப்பினம். ஆனா நிவாரணம் வாங்கின ஆக்கள் எல்லாஞ் சேர்ந்து கடவுளே உவயெல்லோ எங்களுக்கு நிவாரணம் தந்தவை எண்டுபோட்டு உப்பிடியானவைக்கு மணிவிழா எடுக்க மாட்டினம்.

உந்தக்கொண்டாட்டங்கள் எல்லாம் வாத்திமாருக்கு மட்டுந்தான் நடக்கும் வேற ஆருக்கும் நடக்காது. அவையைப் பற்றின நினைப்புகளும் பள்ளிக்கூடங்களின்ரை நினைவுகளும் வகுப்பறையளின்ரை நினைவுகளும் அங்க நடந்த சம்பவங்களும் எண்டைக்கும் எப்பவும் மறக்கப்பட முடியாதவை எண்டுதான் சொல்லவேணும்.ஆச்சி சொல்லுற மாதிரி பள்ளிக்கங்களுக்கும் வகுப்பறையளுக்கும் வாத்திமாருக்கும் நிகரா ஒண்டும் இல்லை. உந்தப் பள்ளிக்கங்களும் வகுப்பறையளும் சுமுகமா வாறதுக்கும் வாத்திமாரும் பிள்ளையளும் சுமுகமா அங்க போறதுக்கும் கடவுள் அருள் புரியவேணும்.

இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.07.2023இல் வெளியிடப்பெற்றது.